# தமிழ்ப் பொழில்

## தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 61 மலர் : 10

## உள்ளுறை

பக்கம்

1. கரந்தைத் தமிழ்ச்சங்கமும் திருக்குறள் நெறிவிளக்கமும் ... 433
2. மவுன மொழி .... 446
3. அபத்தங்களைப் பற்றிய நாடகம் ... 449
4. மக்களைத் தேடும் கலைஞன் ... 454
5. முகிலில்களின் மீது நெருப்பு ... 456
6. இறைச்சி ... 459
7. நாட்டுப்புற நிகழ்த்து கலைகளுக்கான ஆய்வு முறையியல் ... 463
8. ஒரு — நூற்பா விளக்கம் .... 470
9. சிரிப்பு .... 478
10. ஆண்ட தமிழகம் .... 480

### ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்
பேராசிரியர் க. வெள்ளைவாரணன், சிதம்பரம்
சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி , பி. எல்.,
இயக்குநர், தமிழ்வளர்ச்சித் துறை சென்னை.
டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி ,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக்காமராசர் பல்கலைக்கழகம்.
டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.,
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.
பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரி
பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்லைக் கழகம்.
புலவர் ஆ. பாலன், எப். ஏ., எம் ஃபில்.,
துணை முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக் கல்லூரி,
புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி
திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம் ஃபில்.,
துணைப்பேராசிரியர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக் கல்லூரி.

பதிப்பாசிரியர் : பேராசிரியர் ச. பாலசுந்தரம்

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — ~~2018~~ 2019

துணர்: 61 பிரபவ — தை மலர்: 10

சனவரி — பிப்பிரவரி — 1988

## கரந்தைத் தமிழ்ச்சங்கமும் திருக்குறள் நெறிவிளக்கமும்

தொகுப்புரை :
**கவிஞர். ஆறு. காளிதாசன்,**
எம். ஒ. எல். பி. எட்.,
தமிழ்த்துணைப் பேராசிரியர்,
த. உ. க. கலைக்கல்லூரி,
கரந்தை - 2.

தொண்டு தமிழ் முன்னேற்றம் என்னும் முப்பெரும் கொள்கைகளைப் பண்டுமுதல் கடைப்பிடித்து இன்றுவரை தமிழ்மொழி இனம் பண்பாடு இவைகளைக் காத்துத் தேமதுரத் தமிழோசை

உலகமெல்லாம் பரவும் வகை செய்ய வேண்டும் என்ற உள்ளக் கருத்தைத் தன்னகத்தே கொண்டு பணியாற்றி வருகிறது கரந்தைத் தமிழ்ச்சங்கம் உலகப் பொதுமறையாகத் திகழ்கின்ற திருக்குறள் நூலின் நெறியினை மக்கள் தம் வாழ்வில் கடைப்பிடித்து அதன்படி ஓரளவேனும் நடக்கவேண்டும் என்ற உயர்ந்த கொள்கையைத் தன் நெஞ்சகத்தே கொண்டிருந்த கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் ச. இராமநாதன் அவர்கள் தமிழ்ச்சங்க அறிஞர் பெருமக்களுடன் கலந்தாலோசித்துத் திருக்குறள் நெறிவிளக்கத்தொடர் சொற்பொழிவின் தொடக்க விழா வினைத் தமிழ்ப்பெருமன்றத்தில் திருவள்ளுவராண்டு 2017 ஆணித் திங்கள் 18 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (3-8-86) மாலை 6 மணியளவில் தொடங்கி வைத்தார்கள். சங்கச் செயலாளர் திருவாளர் த. கோ. ப. கோவிந்தசாமி பி. காம். அவர்கள் வரவேற்க அக்கூட்டத்திற்குத் தமிழ்ச்சங்கத் தலைவர் ச. இராமநாதன் அவர்கள் தலைமைதாங்க, திருக்குறள் நெறி விளக்கச்சொற்பொழிவுத் தொடரைக் கரந்தைக் கலைக்கல்லூரியின் (புலவர் கல்லூரி) முதல்வர் புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ. அவர்கள் தொடங்கி வைத்தார்.

திருக்குறளின் முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்து அதிகாரத்தைப் பாவலரேறு திரு ச. பாலசுந்தரம் அவர்கள் செம்மையான முறையிலே நிகழ்த்த, திண்டுக்கல், ஜி. டி. என். கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், திருவாளர் மா. வயித்தியலிங்கன் எம்.ஏ ,எம்.பில்., அவர்கள் 'பண்ணென்னாம் பாடற்கியைபின்றேல்' என்னும் தலைப்பில் இசை விளக்கத்தோடு கூடிய சொற் பொழிவினை நிகழ்த்தினார்கள்.

இச்சொற்பொழிவின் முடிவுரையில் க. த. சங்கத்தலைவர் ச. இராமநாதன் அவர்கள் இக்கூட்டம் மாதத்தில் முதல் ஞாயிற்றுக்கிழமையும் மூன்றாம் ஞாயிற்றுக் கிழமையும் தொடர்ந்து நடைபெற உள்ளது. ஆகவே, ஒவ்வொரு கூட்டமும் நிறைவாக வந்திருந்து சிறப்புச்செய்து திருக்குறளின் நெறிப்படி வாழ்வினை அமைத்துக் கொள்ளுங்கள் என்று அன்பு வேண்டுகோள் விடுத்துக் கூட்டத்தினை - நாட்டு வாழ்த்தோடு - நிறைவு செய்தார்கள்.

இத்தொடக்கவிழா அழைப்பிதழ் பல அறிஞர் பெருமக்கட்கும், பல தமிழ்ச் சங்கங்களுக்கும், தமிழ்ச் சான்றோர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. பல்லோரிடமும் இருந்து வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் வந்திருந்தன.

திருக்குறள் நெறிவிளக்கத் தொடர் சொற்பொழிவின் இரண்டாம் கூட்டம் 17—8-86 ஆம் நாளில் நிகழ்ந்தது. கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் ச. இராமநாதன் தலைமையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பேரகராதித்துறைப் பதிப்பாசிரியர் திருவாளர் கல்விக்கடல் எஸ். கே. இராமராசன் அவர்கள் வான் சிறப்பு என்னும் அதிகாரம் பற்றிச் சிறப்புச் சொற்பொழி வாற்றினார்கள்.

இந்தவான் பொய்க்காவிடில் பசும்புல்லின் நுனிகாண்பது எவ்வளவு அரிது என்பதை உலக மக்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் காட்டிப் பல்வேறு இலக்கியங்களின் கருத்தோடு தொடர்புபடுத்தி மிகச்சிறப்பாக விளக்கினார். கூட்டத்தின் சிறப்பினை எண்ணிச் சங்கத் தலைவர் ச. இராமநாதன் அவர்கள் அப்போது மழை இன்மையால் ஏற்பட்டுள்ள பஞ்சத்தைச் சுட்டிக் காட்டித் தொடர்பு படுத்தினார்கள். அக்கூட்டத்திற்குக் கல்லூரித் துணைமுதல்வர் ஆ. பாலன் நன்றி கூற விழா இனிதே முடிந்தது.

ஒவ்வொரு கூட்டத்திலும் அடுத்துப் பேசுகின்ற பேச்சாளரையும் அவருக்குத் தரப்பட்டுள்ள தலைப்பையும் அறிவித்து விடுவது. வழக்கமாகக் கொள்ளப்பட்டது. மூன்றாம் கூட்டத்திற்குச் சங்கத் தலைவர் ச. இராமநாதன் அவர்கள் தலைமைப் பொறுப்பினை ஏற்க, பூண்டி புட்பங் கல்லூரித் தமிழ்த் துணைப் பேராசிரியர் திருவாளர் ந. மெய்ப்பொருள் எம். ஏ. எம்.பில் அவர்கள் திருக்குறளில் ஊழ் என்னும் அதிகாரத்தைப் பற்றிச் சொற்பொழிவாற்றும்போது ஊழின் தன்மை எத்தகைய வலிமை உடையது என்பதற்கு நிகழ்காலத்தில் நடக்கின்ற செயல்களை எடுத்துக்காட்டி எல்லாவற்றாலும் ஊழின் தன்மை மிக்கிருப்பதைச் சுட்டியதோடல்லாமல், காப்பியங்களில் ஒன்றாகிய கம்ப இராமாயணத்தில் பட்டாபிஷேகம் ஏற்க இருந்த இராமன் காட்டுக்குச் சென்றது. அவனது ஊழின் ஒரு பகுதியே என்று விளக்கி, சிலப்பதிகாரத்தின் வரிகளில் ஒன்றாகியும் 'ஊழ்வினை உறுத்து வந்தூட்டும்'' என்னும் வரிகளையும் தொடர்புபடுத்தித் தெளிவுபடுத்தினார்.

முதலிலே ஊழ் எங்களுக்கும் உடன்பாடே என்று கூறிக் கூட்டத் தலைவர் ஊழின் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும் என்ற குறளுக்கு அவருடைய பாணியிலே சில எடுத்துக்காட்டுக்கள் தந்தார்கள்.

நான்காம் கூட்டம் 21 – 9 – 86 இல் ஞாயிறு மாலை 5 மணியளவில் சிறப்புற நடந்தது. இக்கூட்டத்திற்குத் தலைவராகக் கவிஞர் அரங்க முத்துமணி (மாவட்டப் பதிவாளர் ஓய்வு) தஞ்சை அவர்கள் தலைமை தாங்க, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பதிப்புத்துறையில் பணியாற்றும் திருவாளர், நல்லாசிரியர் வேல் சம்பந்த மூர்த்தி அவர்கள் வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரம் கொண்டு வாழ்க்கையில் துணை எவ்வளவு அவசியம் என்பதைத் தெளிவுபட விளக்கினார்கள்.

ஒரு மனிதனின் வாழ்க்கை முன்னேற்றம் அடைய வேண்டுமானால் அது நற்குடிப் பிறந்து நல்லொழுக்கம் பெற்றுத் துணையாக அமைந்த மனைவியினாலேயே முடியும் என்பதைக் கருத்தாக அமைத்து விளக்கம் தந்தார்.

முடிவில் நன்றி உரை கூறிய திருமிகு கல்லூரித் துணை முதல்வர் ஆ பாலன் அவர்கள், வாழ்க்கைத் துணைநலம் என்னும் தலைப்பிலே சொற்பொழிவாற்றிய ஐயா அவர்கள் இன்றைக்கும் பலருக்கும் துணை நலத்தைச் சேர்த்து வைக்கின்றார்கள் என்ற கருத்தை வெளிப்படுத்தி நன்றி கூறினார்கள்.

5—10—87 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி அளவில் தொடங்கப்பெற்ற 5 ஆம் கூட்டத்திற்கு எல்லாக் கூட்டத்திற்கும் தவறாது வந்திருந்து சிறப்பிக்கும் கரந்தைத் தமிழ்ச்சங்க நிறைவேற்றுக்கழக உறுப்பினரும் ஓய்வு பெற்ற மாவட்டப் பதிவாளருமான திருவாளர் ஆர். சண்முகம் பிள்ளை, பி. ஏ., அவர்கள் தலைமை ஏற்க மன்னர் சரபோசி கலைக் கல்லூரியில் ஆங்கிலத் துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் திருவாளர் சி, சுப்ரமணியம் எம். ஏ., எம். பில். அவர்கள் தெரிந்து செயல்வகை என்னும் அதிகாரப் பொருளினை விளக்கமுற எடுத்துரைத்தார்கள்.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு''

என்னும் திருக்குறளின் பொருளுக்கு நல்ல விளக்கமளித்தார்கள். இறுதியில் கூட்டத்தலைவர் முடிவுரையாகச் சொல்லும்போது திருவள்ளுவர் ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து ரத்தினங்களைப் பதித்து விட்டுத்தான் சென்றிருக்கிறார்கள் என்று சுவைபடக்கூறிக் கூட்டத்தினை நிறைவு செய்தார்கள். ஆறாம் கூட்டம் 19—10—86 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் ஆட்சிச் செயலாளரும் பொருளாளருமான (Lay Secretary & Treasurer)

ஆ கலியபெருமாள் அவர்கள் (தஞ்சை) தலைமை தாங்கத் திருவாளர் பேராசிரியர் சொ. பாரதிபித்தன் எம். ஏ. பி. எச். டி., அவர்கள் (திருவையாறு) 'கல்வி' என்னும் தலைப்பிலே தக்க கருத்தினை எடுத்துரைத்தார்கள்.

அவர்கள் உடையார்முன் இல்லார்போல் நின்று கல்வி கற்க வேண்டும் என்றும் ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே என்றும் சிறப்புற எடுத்து உரைத்த பின்பு அக்கூட்டம் இனிதே முடிவுற்றது. தமிழ் வளர்ச்சித் துறையின் துணை இயக்குநர் கு. சிவஞானம் எம். ஏ. அவர்கள் ஏழாம் கூட்டத்தில் சொற்பொழிவாற்ற இசைந்தார் 2—11—86 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி அளவில் ஓய்வுபெற்ற இரயில்வே கணக்குத் தணிக்கையாளரான திருவாளர் கோ. ஆத்மநாதப்பிள்ளை, பி. ஏ. அவர்கள் தலைமை தாங்க நீத்தார் பெருமை என்னும் தலைப்பில் உரை நிகழ்ந்தது.

திருக்குறளின் மூன்றாவது அதிகாரமாகிய நீத்தார் பெருமையைப் பற்றிக் கூறும்போது பற்றுக்களைத் துறந்தவர்களின் பெருமையை அளந்து கூறுதல் உலகத்தில் இறந்தவரை எண்ணிக் கொண்டற்று என்பதைத் தெளிவாக விளக்கிக் கூறிக் கூட்டத்தை நிறைவு செய்தார்கள். இதுபோலவே எட்டாம் கூட்டம் 16 — 11 — 86ல் நிகழ்வுற்றது. இக்கூட்டத்திற்குத் திருவாளர் தண்டமிழ்த் தொண்டர் கு. தமிழ்நிலவன் அவர்கள் தலைமை தாங்க அறுபதாவது அதிகாரமாகிய ஊக்கமுடைமை பற்றி வழக்கறிஞர் புலமை வெங்கடாசலம் எம். ஏ. எர். பில், அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

ஊக்கமிருந்தால் எதிலும் வெற்றிபெறலாம் என்ற கருத்திற்குத் தம்மையே ஓர் உதாரணமாக விளக்கிக்காட்டினார்கள். அதோடு உள்ளுவதெல்லாம் உயர்வாகவே எண்ண வேண்டும் என்ற கருத்தை மிகவும் நயமாக எடுத்துக்காட்டினார்கள். கூட்டம் குறைவாக இருந்தபோது, சங்கத்தலைவர் ச. இராமநாதன் அவர்கள் மேடையில் எழுந்து இன்னும் நிறையபேர்கள் வரவேண்டும் என்று கருத்துத்தெரிவித்தார்கள். முடிவில் நன்றி கூறிய திருவாளர் கல்லூரித் துணை முதல்வர் ஆ. பாலன் அவர்கள் அடுத்த கூட்ட அறிவிப்பை வெளியிட்டார்கள்.

சங்கத்தலைவர் ச. இராமநாதன் அவர்கட்கு இக்கூட்டத்தின் பின் இரண்டொரு நாளில் வாழ்த்துக்களும் பாராட்டு இதழ்களும் வந்தன. குறை இருக்கின்றபோது எடுத்துக்காட்டித் திருத்தியும் மடல்கள் வந்த வண்ணம் இருந்தன.

திருவாளர் நா. கோபாலகிருட்டினன் பி. எ. பி. எட்., (அம்மாப்பேட்டைத் தலைமையாசிரியர், ஊ. ஒ. ந. பள்ளி) அவர்கள் சங்கத் தலைவரவர்கட்கு எழுதிய பாராட்டுக் கடிதத்தில் தலைமையுரையாற்றிய திருவாளர் கு. தமிழ்நிலவன் அவர்கள் விரிவாகவும் விளக்கமாகவும் உரையாற்றாவிட்டாலும் திருக்குறள் தொடர்பானவற்றைப் பேசி அமர்ந்தார்கள். பேச்சுக்கலை ஆற்றல் இல்லாவிட்டாலும் பேசியதில் பல நல்ல செய்திகள் இருந்தன அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றி என்று தெரிவிக்க,இப்படிப் பல மடல்கள் சங்கத் தலைவர் ச. இராமநாதன் அவர்களுக்கு வந்திருந்தன.

இதுபோன்ற கடிதங்களால் மேலும் ஊக்கமடைந்த சங்கத் தலைவர் இன்னும் சிறப்புறப் பணியாற்றவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். பின்பு, 7—12—86 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் தொடர்கூட்டச்சொற்பொழிவின் ஒன்பதாம் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்திற்கு மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் பணியாற்றிவரும் திருவாளர் பேராசிரியர் சி. கோவிந்தராசனார் அவர்கள் தலைமை தாங்க, பூண்டி புட்பங் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் திருவாளர் குரு. கோவிந்தராசன் 23 ஆவது அதிகாரமாகிய புலால் மறுத்தல் என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள்.

எல்லா உயிரும் கைகூப்பித்தொழ வேண்டும் என்றால் புலால் உண்ணுவதைத் தவிர்த்து விடுங்கள் என்றும் தாம் திருக்குறளின் கருத்துக்கு இணங்கித் தவிர்த்ததாகவும் குறிப்பிட்டார்கள்,

இதுபோலவே 21—12—86 ஞாயிறு மாலை 5 மணி அளவில் பத்தாம் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் தணிக்கைப் பிரிவின் மாவட்டப் பதிவாளர் ச. சுப்பிரமணியம், பி ஏ. அவர்கள் தலைமை தாங்க, பூண்டி புட்பங்கல்லூரி ஆங்கிலத்துணைப் பேராசிரியர் திருவாளர் வி. ஆர். அங்கப்பன், எம். ஏ. எம்ஃபில் அவர்கள் இருபத்தைந்தாவது அதிகாரமாகிய அருளுடைமை என்னும் தலைப்பில் சிறப்பாக நகைச்சுவை கலந்து கருத்தாழமாகவும் அருளில்லார்க்கு இவ்வுலக வாழ்க்கை மட்டுமல்ல அவ்வுலக வாழ்க்கையும் இல்லாமல் போய்விடும். ஆகவே ஒவ்வொருவரும் அருளுடைமையோடு நல்நெஞ்சினராக வாழவேண்டும் என்றும் கூறினார்கள்.

திருக்குறள் நெறிவிளக்கத் தொடர்பொழிவின் பதினோராம் கூட்டம் 4—1—87 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி

அளவில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப் பாபநாசம் அரசு மேல்நிலைப்பள்ளியின் உதவித் தலைமையாசிரியர் திருவாளர் ப. இராகவன் எம். எ., பி. ஓ. எல் அவர்கள் தலைமை தாங்க திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ்த்துணைப் பேராசிரியர் ச. செல்வக்கணபதி எம். ஏ. எம்ஃபில் அவர்கள் செய்நன்றியறிதல் என்னும் தலைப்பில் காலத்தினால் செய்த நன்றியையும், பனைத் துணையாகக் கொள்ளும் பயனையும் செய்நன்றி கொன்ற மகற்கு ஏற்படும் இன்னல்களையும் மிகுந்த ஆதாரங்களோடு எடுத்துரைத்தார்.

பன்னிரண்டாம் கூட்டம் 18—7—87 ஞாயிறு மாலை 5 மணி அளவில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வல்லம் அரசு மேல் நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான். சோம. குஞ்சிதபாதம், பி. லிட்., அவர்கள் தலைமைப் பொறுப்பேற்க, திருக்காட்டுப்பள்ளி 18 தெற்குவாடியைச் சேர்ந்த திருவாளர் நாவலர் சி. அரசப்பனார் அவர்கள் பண்புடைமை என்னும் அதிகாரத்தில் பேசினார்கள். விளையாட்டில்கூட ஒருவனை இகழ்ந்து பேசக்கூடாது அது அவனுக்குத் துன்பம் தருவதாகும். அப்படிப்பட்ட பண்பை வளர்க்கக் கூடாது என்று எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கினார்.

திருக்குறள் நெறியினை ஆண்கள் மட்டிலுமே பரப்புவதா ஆணுக்குப் பெண்ணிங்கே இளைப்பிள்ளை என்பதற்கு ஏற்பக் கரந்தை உ. மே. பள்ளியின் தமிழாசிரியை திருமதி புலவர் கோ. தனலக்குமி, எம். ஏ. பி. எட் அவர்கள் 1—2—87 ஞாயிறு மாலை 5 மணிக்குத் தலைமை தாங்கக் குறள்நெறியின் பதின்மூன்றாம் கூட்டம் தொடங்கியது.

அக்கூட்டத்தில் கரந்தை சைனர் தெரு, அறங்கூறும் அன்னை திருமதி ஜி. இராசலட்சுமி அவர்கள் கொல்லாமை என்னும் அதிகாரத்தைப்பற்றிப் புலால் மறுத்தல் அதிகாரத்தோடு தொடர்பு படுத்திப்பேசினார்கள். அறமாகிய செயல் என்பது ஓர் உயிரையும் கொல்லாமையே ஆகும் என்று சைனமதத்தோடு தொடர்புபடுத்திப் பேசினார்கள்.

பதினான்காம் கூட்டம் 15—2—87 மாலை நடைபெற்றது. அக்கூட்டத்திற்குக் காட்டுக் கோட்டை கலைவாணர் என். எஸ். கே. தொ. பள்ளி ஆசிரியரும் செயலாளருமான திருவாளர் அ. பிச்சைமுத்து அவர்கள் தலைமை தாங்கத் திருவாளர் மதுரைக் காமராசர் பல்கலைக் கழக வரலாற்றுத்துறைப்

பேராசிரியர் சி. கோவிந்தராசனார் அவர்கள் கேள்வி என்னும் அதிகாரத்தைப் பற்றிச் சிறக்கப் பேசினார்கள்.

ஒருவனுடைய வாழ்க்கையில் கற்கவில்லை என்றாலும் பரவாயில்லை பல அறிஞர்களும் சான்றோர்களும் பேசுவதைக் கேட்டிருந்தால் போதுமானது. அது அவன் தளர்ச்சியுற்ற காலத்தில் உதவும் ஊன்றுகோல் போலப் பயன்படும் என்று கூறினார். இது திருவள்ளுவரின் அறிவுப்பூர்வமான கருத்தாகும் என்று உரைத்தார்.

பின்பு 1—3—87 அன்று தஞ்சை துவாரகா நகரைச்சேர்ந்த திருவாளர் வழக்கறிஞர் வி. சுந்தரராஜன், பி ஏ. பி. எல் அவர்கள் தலைமைதாங்கத் திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ்த் துணைப் பேராசிரியர் க. வெங்கட்ராமன், எம். ஏ. அவர்கள் குற்றங்கடிதல் என்னும் தலைப்பிலே உரைநிகழ்த்தினார்கள்.

திருக்குறள் நெறி விளக்கத்தொடர் சொற்பொழிவின் 16 ஆம் கூட்டத்திற்குத் தஞ்சை வடக்கு வீதி வழக்கறிஞர் திருவாளர் பா. மாணிக்கவாசகம் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமை தாங்கினார்கள். தலைமைப் பொறுப்பேற்றிருந்த வழக்கறிஞர் அவர்கள் திருக்குறளைச் சட்டத்தோடு ஒப்பிட்டுக் காட்டினார்கள். அவர்களின் பின்னால் பேராசிரியர் ச. பாலசுந்தரம் அவர்கள் தகையணங்குறுத்தல் என்னும் காமத்துப்பாலின் அதிகாரத்தைப் பற்றி மிகவும் சிந்திக்கும் வண்ணம் சுவையோடு சொற்பெருக்காற்றினார்கள்.

பின்னர் 5—4—87 ஞாயிறு மாலை 5 மணியளவில் தஞ்சை வீரராகவா மேல்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் புலவர் இரா. தொல்காப்பியன் எம். ஏ. பி. எட். அவர்கள் தலைமை தாங்கத் திருவையாறு அரசர் கல்லூரிப் பேராசிரியர் சு. தங்கமுத்து எம். ஏ. எம். பில் அவர்கள் உழவு என்னும் அதிகாரம் கொண்டு மாணவர்களிடையேயும் கூட்டத்தாரிடையேயும் நகைச்சுவை தோன்றச்சொற்பெருக்காற்றினார். முடிவில் புலவர் தொல்காப்பியன் ஆசிரியராகப் பணியாற்றினாலும் நல்ல ஆக்கப்பூர்வமான உழவின் தொடர்பான கருத்தை எடுத்துரைத்தார்கள். கூட்டத்தின் முடிவில் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் நாங்கள் இக் கூட்டத்தைச் சிறப்புடனும் சீருடனும் நடத்தத்திட்டமிட்டிருக் கிறோம். ஆனால் கூட்டத்தினரின் வருகை மிகவும் கொஞ்சமாகவே இருக்கிறது. "தமிழனின் உணர்வுகளும் பண்பாடும் நல்ல நிலை எய்துவதற்காகவும் மக்களிடையே நல்ல நெறி பரவ வேண்டும்

என்றும் ஆயிரத்தில் ஒருவராவது அவ்வாறு நடக்க வேண்டும் என்றும் விரும்பித்தான் இக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கு 300 அழைப்பிதழ்கள் அச்சிடுகிறோம். ஆனால் கூட்டத்தின் வருகை எனக்கு மன நிறைவு அளிப்பதாக இல்லை என்று குறிப்பிட்டார்கள்.

அதன் பின்பு 19—4—87 அன்று பதினெட்டாம் கூட்டம் நடைபெற்றது. கரந்தை மாணவர் சமூகநல இயக்கத்தைச் சேர்ந்த திருவாளர் வே. முருகேசன் பி. எஃ சி. பி. எல். அவர்கள் தலைமை தாங்க, கரந்தைக் கலைக் கல்லூரியின் எம். பில். ஆய்வு மாணவர் திருவாளர் மோ. தமிழ்மாறன், எம். ஏ. அவர்கள் ஆள்வினை உடைமை என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தும்போது முயற்சி தன் மெய்வருத்தக் கூலிதரும் என்பதைச் சிறப்பாக எடுத்துக் காட்டினார்கள்.

அதன் பின்னர் முடிவுரையின் போது முயன்றால் முடியாதது இல்லை என்பதற்குப் பல அறிஞர்களின் வாழ்க்கையினை எடுத்துக் காட்டினார்கள். இதுகாறும் வரவேற்பு உரையும், நன்றி உரையும் ஆற்றிவந்த கல்லூரித்துணை முதல்வர் ஆ. பாலன் எம்.ஏ.எம்.பில். அவர்கள் பத்தொன்பதாம் கூட்டத்திற்குத் (3—5—87 ஞாயிறு மாலை 5 மணி) தலைமை தாங்கத் தஞ்சைப் பிரதாபசிம்மபுரத்தைச் சேர்ந்த திருவாளர் பேராசிரியர் கி. கோதண்டபாணி எம். ஏ. பி ஓ. எல். அவர்கள் தெரிந்து தெளிதல் என்னும் அதிகாரத்தை மிகத் தெளிவாகவே தெரிந்துரைத்தார்கள்.

கூட்டத்தலைவர் ஆ. பாலன் அவர்கள் முடிவுரையின்போது தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும் என்னும் குறளுக்குப் புதுமையான நடைமுறைக் கருத்துக் களை எடுத்துக்காட்டி விளக்கத்தைக் கூறினார்கள். 17—5—87 அன்று 20வது கூட்டம் கரந்தை ஐ. கு. பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமிகு ர. உலகநாதன் எம். ஏ. பி. எட்., தலைமையில் நடைபெற்றது. தஞ்சைத் தூய பேதுரு மேல்நிலைப்பள்ளியின் தமிழாசிரியர் புலவர் லியோ இராமலிங்கம் அவர்கள் காதற்சிறப் புரைத்தல் என்னும் அதிகாரத்தில் தமது வாழ்க்கையில் ஏற்பட்ட லியோவின் கதையினைக் காதற் சிறப்புரைத்தல் அதிகாரத்தோடு ஒப்பிட்டுச் சொற்பொழிவாற்றினார். அது மிகவும் கேட்பதற்கும் அனுபவம் என்கின்றபோது ரசிப்பதற்கும் அருமையாக இருந்தது. முடிவுரையின்போது கூட்டத்தலைவர் D. உலகநாதன் அவர்கள் திருவள்ளுவரின் பாணியில் காதலை மிகவும் சிறப்பாகக் குறிப்பிட்டார்கள்.

காதலர் எப்போதும் என் உள்ளத்தில் மகிழ்ந்து வாழ்கின்றார். ஆனால் அதை அறியாமல் பிரிந்து வாழ்கின்றார். அன்பில்லாதவர் என்று இந்த ஊரார் அவரைப் பழிப்பர் என்ற கருத்தினை "உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர் ஏதிலார் என்னும் இவ்வூர்" என்ற குறளுக்கு விளக்கம் தந்து கூட்டத்தை நிறைவு செய்தார்கள்.

இருபத்தொன்றாம் கூட்டம் 7—6—87 ஞாயிறு மாலை 5 மணியளவில் உ. மே. நிலைப்பள்ளியில் கணித ஆசிரியர் திருவாளர் S. சத்தியசீலன் எம். எ. சி. எம். எட். அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. திருமானூர் தமிழாசிரியர் புலவர் மா. வேங்கடேசன் எம். எ. பி. எட். அவர்கள் ஒப்புறவறிதல் என்னும் அதிகாரத்தை இசையோடும் நாட்டுப்புறப் பாடல்களின் கவிநயத்தோடும், கூட்டத்தை கலகலப்பாக்கித் தம் பேச்சினைச் செவ்வனே நிறைவு செய்தார்கள்.

திருவாளர் சத்தியசீலன் அவர்கள் மேடையில் எனக்குப் பேசிப் பழக்கமில்லை என்றும் பல சான்றோர்களும் அறிஞர்களும் தோன்றிய இப் பெருமன்றத்தில் எனக்குத் தலைமைப் பதவி நல்கிய க. த. ச. தலைவர் ச. இராமநாதன் அவர்கட்கு முதற்கண் நன்றி என்றும் தொடங்கி அருமையான தலைமை உரை நிகழ்த்தினார்கள். 28—6—87 ஞாயிறு மாலை 5 மணியளவில் இருபத்திரண்டாம் கூட்டம் உ. மே. பள்ளியின் தலைமைத் தமிழாசிரியர் புலவர் மீனா. இராமதாசு எம். ஏ. பி. எட்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் காரைக்கால் இளைஞர் முத்தமிழ்ச் சங்கத் தலைவர் திருவாளர் முருகையா — இராசேந்திரன், எம். ஏ. பி. எட். அவர்கள் நட்பு என்னும் அதிகாரத்தைப் பற்றிப் பேசினார்கள்.

இளைஞர் முத்தமிழ்ச் சங்கத்திற்கும், கரந்தைத் தமிழ்ச்சங்கத்திற்கும் நட்பு ஏற்படக் காரணமாக இருந்த நண்பர் காளிதாசனுக்கு என் நன்றி என்று தொடங்கி — இந் நட்பு முகநக நட்பது அல்ல அகநக நட்பது ஆகும். அதுமட்டும் அல்ல உடுக்கை இழந்தவன் கைபோல நட்புத்திகழவேண்டும் என்று கூறிக் கம்ப இராமாயணத்தில் இராமனுக்குக் குகனுடன் ஏற்பட்ட நட்புச் சகோதர பாசத்தில் போய் நின்றதல்லவா? அப்படி நட்புத் திகழ வேண்டும் என்று பல இலக்கியங்களோடும் ஒப்பிட்டுக் காட்டினார்கள்.

இருபத்து மூன்றாம் கூட்டம் தமிழவேள் உமா மகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரியின் தமிழ்த்துணைப் பேராசிரியர் திருவாளர் மு. செல்லன் எம். ஏ. எம்ஃபில் அவர்கள் தலைமையில்

நடைபெற்றது. தஞ்சை வீரராகவா மேனிலைப்பள்ளித் தமிழாசிரியர் க. திருநாவுக்கரசு எம். ஏ பி. எட் அவர்கள் ஒற்றாடல் என்னும் தலைப்பில் இனிய ராகத்தோடு கருத்தை விளக்கம் செய்தார்.

புகழ் சார்ந்த மன்னனுக்கு இரண்டு கண்களாகப் பாவிக்க வேண்டியவை ஒற்றும் அதன் உரை சான்ற நூலுமே என்பதை மிகவும் ஆழமாக விளக்கினார்கள். ஒற்றன் கேட்டுவந்த செய்தியைக்கூட உண்மையா என்பதை இன்னொரு ஒற்றனால் அறிந்து வரச் செய்ய வேண்டியது மன்னன் கடமையாகும் என்றும் விளக்கம் கூறினார்.

இருபத்து நான்காம் கூட்டம் 19—7—87 ஞாயிறு மாலை 5 மணியளவில் ஓய்வு பெற்ற தஞ்சை மாவட்ட வருவாய் அலுவலர் திருவாளர் பொன் குலசேகரன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. தஞ்சை தூய அந்தோணியார் மேல்நிலைப் பள்ளியின் தமிழாசிரியர் புலவர் ப. சங்கரன் எம். ஏ. அவர்கள் இறைமாட்சி எனும் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு உணர்ச்சி பொங்கப் பேசினார்கள். அவர்களுடைய கருத்துக்கு நிறைய ஆதரவுகள் இருந்தன. ஒவ்வொரு குறளுக்கும் பல இலக்கியங்களில் இருந்தும் பல நீதி நூல்களில் இருந்தும் கருத்துக்களை ஒப்பிட்டார்கள்.

இக் கூட்டத்திற்குப் பின்பு 2—8—87 ஞாயிறு மாலை 5 மணியளவில் சொற்பொழிவின் 25 ஆம் கூட்டம் தஞ்சை பகுத்தறிவாளர் கழகச் செயலாளர் திருவாளர், கு. வீரமணி அவர்கள் தலைமையில் நடை பெற்றது. குடந்தை அரசு ஆடவர் கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர் திருவாளர் மது ச. விமலா னந்தம் எம் ஏ. எம்ஃபில் அவர்கள் அறன் வலியுறுத்தல் எனும் தலைப்பில் மேடையை விட்டுக் கீழே இறங்கி வந்து கரும்பலகை களை வைத்துப் பாடம் நடத்துவது போலவே மிகச் சிறப்புக் குறள் நெறி பரப்பினார்கள். ஒருவன் வாழ்நாளில் முயற்சி மேற்கொண்டு செய்யத் தக்கது அறம் ஒன்றுதான். காத்துக் கொள்ள வேண்டியது பழி ஒன்றையே ஆகும் என்று விளக்கம் அளித்தார்கள்.

அடுத்த கூட்டம் 16—8—87 அன்று நடை பெற்றது. இருபத்தாறாம் கூட்டத்திற்குத் த. உ. க. கலைக் கல்லூரியின் தமிழ்த்துணைப் பேராசிரியர் முனைவர் சி. வேங்கடபதி எம். ஏ. பி. எட். பி எச். டி. அவர்கள் தலைமை தாங்க அப்போது பூம்புகார் பேரவைக் கலைக் கல்லூரியின் தமிழ்த் துணைப் பேராசிரியர் திருவாளர் மா. இராமலிங்கம் எம். ஏ. அவர்கள் குடி செயல்வகை என்னும் அதிகாரத்தைப் பற்றிப் பேசினார்கள்.

அப்போது என் குடியை நான் உயர்த்திக் காட்டுவேன் என்று ஒருவன் முன்வருவானேயாகில் அவனுக்கு ஊழ்தானே முன்வந்து துணை செய்யும் என்ற கருத்துத் தெளிவுறும்படி சொற்பொழிவு ஆற்றினார்கள். இவர்கள் கூறியவைபோக எஞ்சிய கருத்தினைக் கூட்டத் தலைவர் முனைவர் சி. வே, அவர்கள் செம்மையாக நிறைவு செய்தார்கள்.

13—9—87 ஞாயிறு மாலை 5 மணியளவில் 27 ஆம் கூட்டம் ஓய்வு பெற்ற கூட்டுறவுத் துணைப் பதிவாளர் திருவாளர், ந. சாரங்கன் அவன் தலைமை தாங்க தஞ்சை நகராட்சி உயர் நிலைப்பள்ளித் தமிழாசிரியர் சோதிட கலாநிதி சிவ. நமச்சிவாயம் பி. லிட், பி. எட், ஏ. எல். டி(எஸ்) அவர்கள் மக்கட்பேறு என்னும் தலைப்பில் திருக்குறள் காட்டும் நெறியினைப் புலப்படுத்தினார்கள்.

தந்தை மகற்கு ஆற்றும் நன்றியையும் மகன் தந்தைக்கு ஆற்றும் உதவியையும் இக்கால மாணவர்களோடு தொடர்புபடுத்தி நகைச்சுவைத் தோன்ற எடுத்துரைத்து முடித்தார்கள். 20—7—87 ஞாயிறு மாலை 5 மணியளவில் இருபத்து எட்டாம் கூட்டம் சுகாதார இலாகாவில் பணியாற்றி ஓய்வு பெற்ற திருவாளர் எஸ். பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவையாறு சீனிவாசராகவ மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியர் திருவாளர் புலவர் பா. சீனிவாசன் எம். ஏ. அவர்கள் இனியவை கூறல் என்னும் தலைப்பிலே இனிய அவையை நோக்கி இனிய கருத்துப் பொதிந்த குறள்களின் தன்மையை மிக்க அடக்கத்தோடு தனக்கே உரிய பாணியில் எடுத்துக் கூறினார்கள்.

இக்கூட்டத்தின்போது குறைவான நபர்களே வந்திருந்தார்கள். அவர்களிடம் கூட்டம் குறைவாக இருக்கிறதே என்ன காரணம் என்று கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் ச. இராமநாதன் அவர்கள் கேட்டார்கள். ''ஞாயிற்றுக்கிழமைகளில் பல இடங்களிலும் கூட்டம் நடக்கிறது. தொலைக் காட்சியில் மாலையில் திரைப்படங்கள் காட்டுகிறார்கள். ஆகவே இக்கூட்டத்தை வரும் கூட்டத்திலிருந்து சனிக்கிழமையாக மாற்றுங்கள்'' என்ற வேண்டுகோளுக்கு இணங்க, மாறுதல் செய்யப்பட்டது.

இருபத்தி ஒன்பதாம் கூட்டம் 17 — 10 — 87 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்வி நிறுவனங் களில் ஒன்றாகிய இராதா கிருட்டினத் தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியரும் நல்லாசிரியர் விருது பெற்றவருமான

திருவாளர் புலவர் சிவ. பாலசுப்ரமணியம், பி. லிட். பி. எட். அவர்கள் தலைமை தாங்க, பூண்டி புட்பங் கல்லூரி ஆங்கிலத் துணைப் பேராசிரியர் ஏ. ஜான்விக்டர் எம். ஏ. எம்.பில். அவர்கள் இல்வாழ்க்கை என்னும் தலைப்பில் சொற்பொழிவினை நிகழ்த்தினார்கள்.

அவர் ஆங்கிலத் துறையினராக இருந்ததனால் தமக்குத் தெரிந்த வகையில் கூட்டத்தில் பேசினார். அவருடைய உரையின் நொய்வான இடங்களைத் தக்க வகையில் சரிசெய்து, மனிதன் அறநெறியில் இல்வாழ்க்கையை நெறிப்படுத்தி, வாழவேண்டும். அவ்வாறு இந்நெறியிலே வெற்றி பெறுவோமானால் எல்லா வகையிலுமே அவனுடைய வாழ்க்கை மேம்பாடு அடையும் என்று திரு சிவ-பாலசுப்பிரமணியம் அவர்கள் உலகியல் அறிவோடு-விளக்கிக் காட்டினார்கள்.

அதன் பின்பு திருக்குறளின் முப்பதாம் கூட்டத்திற்குத் (7—11—87 சனிக்கிழமை மாலை) தஞ்சாவூர் ஆயுள் காப்பீட்டுக் கழகச் சட்ட மேலாளர் திருவாளர் பா-குணசேகரன் தலைமை தாங்க, வடக்குமாங்குடி தலைமையாசிரியர் (ந. நி. பள்ளி) நா. கோபால் கிருட்டினன் பி. ஏ. பி. எட். அவர்கள் அன்புடைமை என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள்.

அவ்வுரையில் அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்பதைப் பாமர மக்களும் புரிந்து கொள்ளும்படி சொல்லி அன்பில்லாதவற்றை அறக்கடவுள் அழிக்க முற்படுவான். ஆகவே இவ்வுலக உயிர்கள் அனைத்தின் மேலும் அன்பு செலுத்துங்கள் என்றார்கள்.

அன்பே கடவுள் ஆகவே உருவங்களை வணங்கவேண்டும். உயிர்களிடத்தில் அன்பு செய்யக் கற்றுக்கொள்ளவேண்டாம் என்று சமுதாயத்திற்கு நல்ல பல கருத்துக்கள் சொல்லிக் கூட்டத்தை நிறைவு செய்தார்கள்.

குறிப்பு :

ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமையும் மூன்றாவது சனிக்கிழமையும் தொடர்ந்து திருக்குறள் நெறி விளக்கத் தொடர் சொற்பொழிவு நிகழ்வுறும்.

# மவுன மொழி

டாக்டர் பா. வீரப்பன்
தமிழ் விரிவுரையாளர்
மண்டலக் கல்வியியல் கல்லூரி
மைசூர் - 570 006

காதல் பிறக்குமாற்றை இன்னும் சற்று நெருக்கமாகக் காண விழைகின்றார் உருதுமொழிக் கவிஞர் ஒருவர் :

The secrets of desire and love are revealed by eyes
Eyes have no tongue but they are not without speech (1)

கண்கள் காதல் கதை பேசுவதனைத் திருவள்ளுவரும்,

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில.

எனக் காட்டுகின்றார். பேச்சு செயலற்றுப் போகும்போது இவ்வகை மவுன மொழிகள் சிறப்பாகச் செயல்பட்டாலும் பேச்சின் போதும் பேச்சினை வலுப்படுத்த உடலுறுப்புகள் (Para lingnistic traits) பயன்படுத்தப் பெறுவதனையும், ஊமையும் குருடும் சைகை மொழிகளுக்கு உடல் உறுப்புகளைப் பயன்படுத்துவதனையும் பார்க்கிறோம், இவ்வகை மொழிகளுள் பேச்சுமொழி ஒன்றினையே ஆய்ந்து வந்த மொழி வல்லார் இப்போது மற்ற கூறுகளையும் ஆய்ந்து வருகின்றனர். இத்துறை Non verbal communication என வழங்கப் பெறுகிறது. இதுவே Silent Talk எனவும் குறிக்கப் பெறுகிறது.

தமிழில் இத்தகு ஆய்வு தோற்றம் கொண்டுள்ளதா ? என்று பார்வைக்குக் கிடைக்கும் முதல்நூல் 'தமிழ் நாவலில் உடல்மொழி' எனும் நூலாகும். இந்நூலாசிரியர் பேராசிரியர் எம். எஸ். திருமலை சென்னைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய அறக்கட்டளைச் சொற்பொழிவே இந்நூல், இதனை இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

Non verbal communication என்பதனை இந்நூலாசிரியர் 'உடல்மொழி' எனத் தமிழாக்கம் செய்துள்ளார். இது சரியானதா? சரியில்லை என்றால் எச்சொல் சரியானதாக அமையும் எனக் காணவேண்டுவது இவண் இன்றியமையாததாகின்றது.

'உடல்மொழி' எனும் தொடர் குறிக்கும் கருத்தினை இந்நூலசிரியர் பின்வருமாறு தருகிறார். 'செய்திப் பரிமாற்றம் ஒரு

போதும் வாய்மொழி மூலம் மட்டுமே நடைபெறுவதில்லை. வாய்மொழியோடு எப்போதும் உடல்மொழி இணைந்து வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். உடல்மொழியை வாய்மொழியிலிருந்து வேறுபட்டது என்று சொல்வதால், வாய்மொழியைச் சாராது தனித்து அமையும் மவுனத்தையும் உடல்மொழியின் ஒரு பகுதியாகக் கருதவேண்டும். அதாவது, உடல் உறுப்புகளின் அசைவு, இருக்கை, அமர்வு, அணுக்கம் போன்றவைகளோடு மவுனத்தையும் உடல்மொழியின் ஓர் உறுப்பாகக் கொள்ளவேண்டும். இது மட்டுமல்லாது, வாய்மொழியின் ஒரு சில இயல்புகளைக் கூட உடல்மொழியின் உறுப்புகளாகக் கொள்ள வேண்டும் (ப. 2)[3] இதில் ஆசிரியர் வாய்மொழி, மவுனம் உடல்மொழி என்ற தொடர்களைப் பயன்படுத்துகின்றார். மவுனம் என்பதனை உடல் அசைவுகளுடன் ஒன்றுபடுத்தி உடல்மொழி எனக்கொள்கின்றார். உடல் அசைவுகள் பெரும்பான்மை என்பதால் உடல்மொழி எனும் தொடரை இங்கு ஆசிரியர் பயன்படுத்தியிருக்கக்கூடும் என எண்ண இடமுள்ளது.

'உடல்மொழி' எனும் சொல் வேறு பொருளிலும் பயன்பட வாய்ப்பு உள்ளதா? நான் முன்னர்க் குறிப்பிட்டுள்ளபடி குஷ்வந்த்சிங் Language of lust என உடலால் பகிர்ந்து கொள்ளும் உணர்வுகளைக் குறிக்கின்றார். இத்தொடரை 'உடல்மொழி, என அழைக்க வாய்ப்புள்ளது. மற்றும், மனிதனுடைய அங்க அசைவுகளைக் கொண்டு அவனுடைய பண்பு நலன்களைப் பகுத்தறிவும் கலையும் Body Language[4] என்றே அழைக்கப்படுதல் இவண் கருதுதற்குரியது.

'மவுனம்' என்பது அமைதியான நிலையிலும் பொருள் தருவது எனும் நிலையிலேயே இந்நூலில் கொள்ளப் பெறுகின்றது. இதனை விரித்து 'மவுனமொழி' எனச் சொல்லும்போது, பேச்சுமொழி தவிர்த்த மவுனம், உடல் அசைவுகள் போன்ற அனைத்தையும் இச்சொல் உணர்த்துவதாகக் கொள்ளுதல் சிறப்பாக அமையும்.

தொடக்கத்தில், தொல்காப்பியரும் மெய்ப்பாட்டியலில் இக்கருத்துக்களைத் தருவதாகக் கண்டோம். பின் ஏன் இதை மெய்ப்பாட்டு மொழி[5] எனக் கருதுதல் கூடாது? என்பதும் காணுதல் வேண்டும். மெய்ப்பாடு என்பது ஒருவனுடைய உள்ளத்துணர்வுகள் அவனது மெய்யில் வெளிப்படுத்தப்படுதல் எனும் நிலையில் அமைந்து இக்கருத்துகள் பிறனொருவனுடன் பரிமாறிக்கொள்ளப் படுதல் எனும் நிலையில் அமைவது இல்லை எனவே கருத்துப் பரிமாற்றம் என்பதற்கு முதன்மை தராத நிலையில்

'மெய்ப்பாட்டுமொழி' எனும் சொல் பொருந்தாதாகின்றது எனலாம்.

டாக்டர் தெய்வசுந்தரம் (சென்னைப் பல்கலைக்கழகம்) Verbal, Non verbal என்பதனை மொழிசார், மொழிசாரா எனக் குறிப்பிடுவதாக அறிந்தேன். இச்சொற்கள் புதியன படைத்தல் எனும் ஆர்வத்தினை மட்டுமே காட்டுகின்றன. புதிய சொல்லாக்கங்களின் போது ஏற்கனவே வழக்கில் உள்ள சொற்களை மறந்துவிடுதல் ஆகாது. verbal communication என்பது ஏற்கனவே 'பேச்சு மொழி' என அனைவராலும் ஏற்கப்பட்டுள்ளது. தவிர 'மொழிசாரா' என்பதைவிட பேச்சுமொழி அல்லாத அனைத்தையும் 'மவுனமொழி' எனும் சொல்—ஏற்கனவே அறிந்த சொல் குறிப்பிடுவதாக அமைகின்றது.

மேலே சொன்னவைகளைக் கருத்தில் கொண்டு காணும்போது, Verbal, Non verbal Communication என்பன பேச்சுமொழி, மவுனமொழி எனத் தமிழில் வழங்கப் பெறுதல் சிறப்பாகும் என உணரலாம்

இக்கருத்துக்கள் எழக் காரணமாயமைந்த 'தமிழ் நாவலில் உடல் மொழி' எனும் நூல் தமிழ் இலக்கியத் திறனாய்வுலகில் புதியமுயற்சி ஆனால் முதிர்ச்சியான கருத்துகளைத் தந்து வளம் சேர்க்கும் ஒன்று.

## குறிப்புகள் :-

1. Kushwant Singh, 'The Language of Love,' Express Magazine, 18 Oct. 87, P. 5.
2. M. S. Thirumalai, Silent Talk (Non verbal communication), CIIL, Mysore, June 1987.
3. மா. சு. திருமலை, தமிழ் நாவலில் உடல்மொழி, இந்தியமொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர், மே 1987.
4. Allan Peas, Body Language (How to read others thoughts by gestures), Sudha Publications Pvt Ltd., New Delhi, 1987.
5. டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் இதனை 'மெய்ப்பாட்டு மொழி' எனதே பொருத்தம் எனக் குறிப்பிடுகிறார்.

# அபத்தங்களைப் பற்றிய நாடகம்

பேரா. சே. இராமானுஜம்,
துறைத்தலைவர்,
நாடகத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு எழுத்தாளர்கள் பலர் அணு, ஆயுத அபாயத்தினையும் அதனால் நிகழவிருக்கும் உலகப்பேரழிவினையும் எதிர்த்துத் தம் கருத்தை வெளியிடலாயினர். அவர்களுடைய படைப்புக்களில் ஏமாற்றமும், நம்பிக்கையின்மையும் தொனித்தன. எதிர்காலத்தைப் பற்றிய எதிர்பார்ப்பை இழந்த சூனிய நிலை வெளிப்படலாயிற்று. எனவே நியதி, தர்க்க நியாயம், உறுதியின்மை ஆகியவைகளால் நிறைந்த எதிரும் புதிருமான ஓர் பிரபஞ்சத்தில் தாங்கள் சிக்கித் தவிப்பதை அவர்கள் உணர்ந்தார்கள். குழப்பமும் புதிரும் நிறைந்த அத்தகைய வாழ்க்கையில் மனிதனுடைய உயர்ந்த நோக்கங்களுக்கும் செயல்களுக்கும் பொருளேதும் இருக்க முடியுமா, என்பதைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினர். தார்மீகம் மற்றும் சமுதாய மதிப்பீடுகளைப் பின்னணியாகக் கொண்ட தனிமனித வளர்ச்சிக் கோட்பாடுகளைப் புறக்கணித்தார்கள். கடவுள் இறந்துவிட்டார் என்ற கொள்கையின் அடிப்படையில் பகுத்தறிவு என்பது உட்கொள்ள முடியாத கொள்கையாக்கமாகத் திகழ்கிறது எனக் கொண்டார்கள். மனித ஆய்வுக்கும், அறிவிற்கும், வளர்ச்சிக்கும் அப்பால் இருண்ட ஆழங்காண முடியாத சக்திகள், உலகையாட்டிப் படைக்க, இத்தகைய இவ்வுலகில் பிறவாமலிருப்பதே நல்லது என்று கொண்டார்கள். தனது வாழ்க்கையின் நெறியைத் தானே வகுத்துக் கொள்ள வகையற்றுச் சின்னாபின்னமாகிச் சிதறிய உலகில் மனிதத் தன்மைகள் யாவும் சிறுமைப் படுத்தப்பட்டு அர்த்தமற்ற வாழ்க்கையில் சூனியங்களை நோக்கி மெய்யசைத்து வாழ்வதுதான் மனித வாழ்க்கையாகிவிடுகின்ற தன்மையை உணர்ந்தார்கள்.

வாழ்வைப்பற்றிய உண்மைகளுக்கும் வாழ்க்கையில் நடக்கின்ற நிகழ்ச்சிகளுக்கும் தானாக எத்தகைய பொருளும் இல்லை. அவற்றிற்குப் பொருள் கற்பிப்பது அனைத்துமே மனிதன்தான். ஒரு செயல் ஒழுங்கீனமானது என்று கூறப்படுவதற்குக் காரணம், அச்செயலைவிட அதைப்பற்றி மனிதன் கருதுகின்ற தன்மையே அடிப்படையாக இருக்கின்றது. எனவே, அணுசக்திக்கும், போர்

அச்சத்திற்கும் ஆளான இன்றைய உலகில் வாழையடி வாழையாக வகுக்கப்பட்ட அத்தனை ஒழுக்க நெறிகளும், கேள்விக்குறிகளாக மாறுகின்றன. ஏனெனில் இன்றைய உலகம், அந்த ஒழுக்க நெறிகளுக்கு அடித்தளமாக அமைந்த காரண காரியங்களை ஏற்கத் தயாராக இல்லை. ஒழுக்கநெறி என்பது முழுக்க முழுக்க ஒவ்வொருவரின் தனிப்பட்ட கோட்பாடு என்ற நிலைக்கு மானுடத்தின் சிந்தனை குறுகி விட்டது.

மேற்கூறிய சிந்தனை ஓட்டத்தில் வாழ்க்கையைப் பற்றிய கணிப்பை ஏற்படுத்திக்கொண்ட எழுத்தாளர்கள், குறிப்பாக நாடக ஆசிரியர்கள், மனிதனுடைய செயல் அனைத்தினையும், அர்த்தமுள்ளது, இன்றியமையாதது என்றோ-அர்த்தமற்றது தேவையற்றது என்றோ பிரித்துப் பார்க்க முடியாதபடி அமைந்துள்ளன என்று கருதினார்கள். ஏனெனில் மனிதன் அர்த்தமுள்ள இன்றியமையாத செயலைச் செய்தாலும் அல்லது அர்த்தமற்ற தேவையற்ற செயலைச் செய்தாலும் இவ்விருவகையான செயல்களின் விளைவு ஒன்றேயாகும். அதாவது மனித வாழ்க்கையை, அவன் ஆன்மீக உணர்வை, ஒரு அங்குலம்கூட மேலே கொண்டு போவதில்லை. ஏன்? எங்கே கொண்டு செல்லும் என்பதுகூட தெரியாத நிலையில் மனித வாழ்க்கை அமைந்திருக்கிறது. அந்த அளவிற்கு, நிச்சயமற்ற ஒரு வாழ்க்கையை, மனித அறிவின் வளர்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞானமும், தொழில் நுட்ப வளர்ச்சியும் அழிவுச் சாதனங்களின் களஞ்சியங்களை நிறப்புவதில் பயன்படுத்தப்பட்டு விட்டன.

இத்தகைய சூழலில் மனிதனுடைய சாதனைகள் அனைத்தையும் உண்மையான சாதனைகள் என்று கூறமுடியுமா? மனித வாழ்க்கை அதனுள் உண்மையான வெற்றியை நோக்கி நடைபோடுகிறது என்று இயம்ப முடியுமா? வாழ்க்கையையே சிதைத்துச் சின்னா பின்னமாக்கி நிர்மூலமாக்குகின்ற நிலையில் அடித்தளத்தை அமைத்துக்கொண்டு அதன்மீது, மனித மதிப்பீடுகளை வகுத்துச் செல்வதில் என்ன பொருளிருக்கமுடியும்? எனவே வாழ்க்கையின் நோக்கம் அர்த்தமற்றதாக மாறி நிற்கும்போது அதன் பின்னணியில் மனித குலத்தை மேம்படுத்த ஆற்றுகின்ற ஒவ்வொரு செயலும் அறிவிற்கு அப்பாற்பட்டதும், அபத்தமானதுமாகவே அமைய முடியும். இது போன்ற அபத்த நிலைகளைத் தொகுத்துக்காட்டி மனித வாழ்க்கையின் அர்த்தமற்ற நிலைமையை விளக்கிய நாடக ஆசிரியர்களுடைய படைப்புகள் 'அபத்தங்களைப் பற்றிய நாடகங்கள்' என அழைக்கப்பட்டன.

தங்கள் நாடக ஆக்கத்திற்குத் தினசரி வாழ்க்கையிலே மனிதன் ஈடுபடுகின்ற அபத்தங்களையெல்லாம் தொகுத்துக்காட்டி, அதன் மூலம் நாடக ஆசிரியர்கள் வழியமைத்துக் கொண்டார்கள். இந்த அபத்தங்களுக்கிடையே தன் வாழ்க்கையைப் பற்றி தானே ஏற்படுத்திக்கொண்ட சில குறிக்கோள்களையும் மதிப்புகளையும் பின்பற்றி நாட்களைக் கழிப்பது என்பது இந்த நூற்றாண்டில் வாழ்கின்ற மனிதனுடைய விதியாகும், என்பதை தங்கள் நாடகங்களில் சுட்டிக்காட்டினார்கள்.

அயர்லாந்தைச் சார்ந்த சாமுவேல் பெக்கட், பிரஞ்ச் நாட்டைச் சார்ந்த யூஜின் ஐனஸ்கோ, அமெரிக்காவைச் சேர்ந்த எட்வேர்ட் ஆல்பி, இங்கிலாந்தைச் சேர்ந்த ஹெரால்ட் பின்ட்டர் ஆகியோர் அபத்த நாடக ஆசிரியர்களுள் சிறந்தவர்களாவார். சாமுவேல் பெக்கட்டின் 'கோதோவைக்காத்து' ஐனஸ்கோவின் 'நாற்காலிகள்', ஷெனேவின் 'பால்கனி' ஆல்பியின் 'அமெரிக்கக்களவு' பின்ட்டரின் 'காப்பாளர்' ஆகியவை அபத்த நாடகங்களில் குறிப்பிட வேண்டியவையாகும். இத்தகைய நாடகங்களின் வடிவமைப்பு தனித்தன்மை உடையதாகும். கதையமைப்போ, கட்டுக்கோப்பு நிகழ்வுகளோ இந்நாடகங்களில் காண முடியாது. அபத்த நாடகங்கள் பெரும்பாலும் ஓரங்க நாடகங்கள் போலச் சிறியவையாகும்.

'கோதோவுக்காகக் காத்திருந்து' என்னும் நாடகம் மனித வாழ்க்கையில் எதிர்பார்ப்பின் அடிப்படையில் காத்து நிற்கும் நிலையை உணர்த்துவதாகும். கோதோ என்பவன் யார்? எப்படிப்பட்டவன்? அவனால் என்ன நன்மை விளையும்? அவனுக்காக ஏன் காத்திருக்க வேண்டும்? என்பது பற்றி ஒன்றுமே அறியாத பாமரர்கள் இருவர் அவனுக்காகக் காத்து நிற்பதற்காக விதிக்கப்பட்ட நிலையைக் காட்டுகிறது இந்நாடகம். இவ்வாறு காத்து நிற்பதற்கிடையில் தங்கள் தனிப்பட்ட உலகில் நீண்ட நேரம் வாழ முடியாமலும், அதே தருணத்தில் இருவரும் சேர்ந்து வாழும் மனோ நிலையில் நீண்ட நேரம் வாழ முடியாமலும் தவிக்கும் நிலையைக் காட்டுகிறது இந்நாடகம். மனிதனுடைய சிந்தனை ஓட்டம் ஏதோ பிறருக்கு அறிவுறுத்தும் வாசகங்களாகவோ பலர் பின்பற்றி வாழும் வாழ்க்கையின் மாதிரிகளாகவோ அமையாது, சிந்தனை ஓட்டத்திலேயே வாழும்போது மனிதன் படும் அவல நிலையைக் காட்டுவது 'நாற்காலிகள்' என்னும் நாடகமாகும். நகரத்திற்குப் புறத்தில் நடக்கும் ஒரு புரட்சிக் கட்டுக்கோப்பினைத் தொகுத்தளிப்பதற்கு மாறாக முப்பட்டைக் கண்ணாடிக்குள்

அகப்பட்ட வளையல் துண்டங்கள் வழங்கும் கோலங்கள் போல் காட்டுவது 'மேல்மாடம்' என்னும் நாடகமாகும். முன்னேற்றத்தின் நம்பிக்கை, கூட்டுக்குடும்ப வாழ்வு,இணைந்து வாழ்தல், உடல்கட்டு போன்ற கலாச்சாரக் கூறுகள் அனைத்தையும் மறத்துக்காட்டுவது 'அமெரிக்கக் களவின்' கருத்தாகும். அரவணைப்பு, ஆதரவு, கருணை ஆகியவை நிலைக்க முடியாது மீண்டும் மீண்டும் மனிதனைத் துயர வாழ்க்கைக்கு தள்ளுவதே நடைமுறை நிலை என்பதைக் காட்டுவதே 'காப்பாளர்' என்னும் நாடகமாகும்.

கடந்த காலப் பின்னணியில் ஓர் இடத்தில் ஆரம்பித்து பல நிகழ்ச்சிகளைத்தொடர்ந்து அவற்றின் அடிப்படையில் ஓர் முடிவை தருகின்ற தன்மை இந்த நாடகங்களுக்கு இல்லை. ஏதோ ஒரு நிகழ்ச்சியை மட்டும் பின்பற்றி அதை மட்டும் நிலையாகச் சுற்றி வரும் தன்மை படைத்தன இந்த நாடகங்கள்,நாடகத்தின் சிக்கலை உணர்த்தல் அதன் சிக்கலில் வளர்ச்சியைக் காட்டுதல், அச்சிக்கலின் உச்சக்கட்டத்தை வலியுறுத்தல், சிக்கலுக்குத் தீர்வு காணுதல் போன்ற வரைமுறைகள் இந்நாடகங்களில் காணப்படுவதில்லை. பழகிப்போன நாடக இலக்கண வரம்புகளை இவை, பின்பற்றுவது கிடையாது. இந்நாடகங்களிலுள்ள நிகழ்ச்சிகளும் பெரும்பாலும் நடப்பியல் நிகழ்ச்சிகளைத் தாண்டி பகல் கனவு, தீயகனாக்கள், கற்பனை உலகங்கள், கனவு நிலைக் காட்சிகள் ஆகியவைகளில் ஒன்றைப் பிரதிபலிப்பனவாகவே அமைந்திருக்கும். தர்க்கரீதியான கால அமைப்போ, களஅமைப்போ இந்நாடகங்களில் காணப்படுவதில்லை. 'பாத்திரப்படைப்பும் இந்நாடகங்களில் வழக்கமான நாடகங்கள் போல் அமைவதில்லை. பாத்திரப்படைப்பு என்று கூறும் அளவிற்கு இங்குக் காணப்படுவதில்லை.

ஒரு தனிப்பட்ட பாத்திரத்தின் குணநலன்களைப் பின்பற்றி நாடகத்தில் அப்பாத்திரம் எவ்வாறு வளர்ச்சியடைகிறது என்று பார்ப்பது போல இந்நாடகங்களில் பார்த்தல் இயலாது. இந் நாடகங்களில் பல பாத்திரங்கள், மனிதப் பொதுத் தன்மைகளால் கீறப்பட்ட கேலிச்சித்திரங்கள் போல அமைந்தவை. அவை வளர்ச்சியற்ற பொது மனிததன்மைகளைக் காட்டுகின்ற பாத்திரங்களாகும். பல்வேறு மொழிகளில், பல்வேறு நாடுகளில் எழுதப்பட்டாலும் அபத்த நாடகங்களின் மொழி நடையில் உள்ள ஓர் பொதுத்தன்மை சிக்கனமான சிதறிய சொற்றொடர்களாக அமைந்திருப்பதே ஆகும். மேடையில் காட்சி மொழிக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு, நாடகத்தின் பேச்சுமொழி குறைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இந் நாடகங்களில் இசை

என்பது அதன் அடிப்படையான பயன்பாட்டிற்கு மட்டுமே அமைந்ததாகும். கூச்சல்கள், கூக்குரல்கள், கூவல்கள், வீறிட்டுக் கத்துதல், வார்த்தைகளின் ஓசையில் புகுந்து விளையாடுதல் குறிப்பிட்ட சில இசைக்கருவிகளை மட்டும் சார்ந்து நிற்றல் ஆகிய தன்மைகளால் இசை, பாட்டு என முழைத்து நிற்காமல் ஒட்டு மொத்த வடிவில் ஒட்டி நிற்பதாகும்.

இந்திய நாடக மரபில் ஒன்பான் சுவைகள் தலைமையிடம் பெற்றுப் பார்வையாளர், சுவைஞராகி சுவையின்பம் துய்த்து நாடகத்தின் உட்கருத்தை உணருகிறார். மேற்கத்திய பாணியில் துன்பியல் நாடக இலக்கணப்படி அழுகை, அச்சம் ஆகிய உணர்ச்சிகளுக்கு வடிகாலிட்டு மனித நிலையை உணருகின்ற கருத்துத் தலையிடம் பெறுகிறது. இன்பியல் நாடகங்களிலோ பாத்திரங்கள் மனிதத் தன்மைகளைப் பாராட்டுதற்குரிய நிலையிலும் கேலிக்குரிய நிலைகளிலும் காட்டி நிற்பனவாம். துன்பியல், இன்பியல் இரண்டும் விரவிநிற்கும் நாடகங்களில் துன்பமும் இன்பமும் கலந்து மாறி மாறி இயங்கிச் செல்கின்ற மனநிலை வலியுறுத்தப்படுவதைக் காணலாம். மிகைப்பட வடித்துக் காட்டும் நாடகங்களில் சிக்கலைப் பின்னிப் பிணைத்துத் திகிலை ஊட்டி நிற்பது தலையானதாகும். அபத்தங்களைப் பற்றிய நாடகங்களிலோ இலக்கியம் சாராதா நாடகத்தில், மனித உணர்ச்சிநிலை சாராத பாத்திரங்களால் பொருளும், நியதியும், பிறழ்ந்த இருபதாம் நூற்றாண்டு மனித வாழ்க்கையின் சூன்யத்தையும் அர்த்தமற்ற தன்மையையும் நாடகப் படைப்பிறகே உரித்தான காட்சி மொழியில் காட்டி நிற்பதாகும். இதுவே அபத்தநிலை பற்றிய நாடகக் கோட்பாடாகும்.

---

நூலறிமுகம் :

# மக்களைத் தேடும் கலைஞன்

ஆசிரியர் : தார்க்கோவ்ஸ்கி
மொழி பெயர்ப்பாளர்கள் : சுகுமாரன், ஸ்ரீராம், சிவகுமார்
வெளியீடு : சென்னை பிலிம் சொஸைட்டி சார்பில்
சென்னை புக்ஸ், 6, தாயார் சாகிப், 2 வது சந்து,
சென்னை-2 விலை ரூ. 12.00

புஷ்கின், கோகோல், தாஸ்தயேவ்ஸ்கி, டால்ஸ்டாய் இவர்களில்லாமல் ஒரு கலைஞனாக என்னால் இருந்திருக்க முடியாது என்றே நினைக்கிறேன்... நான் இயற்கையாகவே ரஷ்யன். கலைத் துறையில் என் நிலைப்பாடு அதைச் சார்ந்தே உள்ளது. ஒரு வேளை நான் ஆங்கிலேயனாகவோ பிரெஞ்சுக் காரனாகவோ அல்லது வேறு எந்த தேசிய இனத்தைச் சேர்ந்தவனாகவோ இருந்திருந்தாலும் நான் சுலபமாகவே உணர்ந்திருப்பேன் ... ஒவ்வொரு தேசியத்திலுமுள்ள தனித்தன்மை அல்லது விசேஷத் தன்மையை நான் உணர்கிறேன். ஆனால் அதற்காக ஒருவன் இன வெறிக்கு பலியாக் வேண்டும் என்று அர்த்தம் ஆகாது. [பக். 73, - 74]

என்றார் ரஷ்யத் திரைப்படக்கலைஞர் - இயக்குநர் அந்த்ராய் தார்க்கோவ்ஸ்கி. இவ்வாறு ஒரு பேட்டியில் கூறியபோது அவர் ரஷ்யாவில் இல்லை. ரஷ்யாவுக்குப் போகவும் முடியாதிருந்தது. ரஷ்யாவிற்குத் திரும்பிச் செல்லாமலே இறந்து போய்விட்டார். அரசாங்கத்தோடு ஏற்பட்ட பிணக்கே இதற்குக் காரணம். எனினும் ரஷ்யதேசிய இனத் தனித்துவம் பற்றிய - பிற தேசிய இனங்களுக்கு மாறாகாத - பண்பாட்டுணர்வு ஒன்று அவரிடம் ஆழமாய் இருந்தது.

தார்க்கோவ்ஸ்கி எழுதிய இரு கட்டுரைகள், அவர் தந்த ஒரு பேட்டி ஆகியவற்றின் மொழி பெயர்ப்பும், அவர் பற்றியும் அவருடைய படங்கள் பற்றியும் எழுதப்பட்ட மூன்று கட்டுரைகளும் கொண்டு 'மக்களைத் தேடும் கலைஞன்' எனும் நூல் வெளி வந்துள்ளது.

இந்த நூலைப் படித்த போது தமிழ்த் தேசிய இனங்குறித்து மனம் அசைபோடுவதைத் தவிர்க்க முடியவில்லை.

ஒன்றரை அல்லது இரண்டு ரூபாய்க்கு வாராந்திர, மாதாந்திரக் குப்பைகள் — பத்திரிக்கைகள் என்கிற பெயரில் — தமிழனுக்குக் கிடைத்து விடுகிறது, தமிழில் வரும் திரைப் படங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. தமிழனின் அரசியல், சமூக பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தினுள்ளும் கிருமிகள் போல் பரவிப் பண்பாட்டுச் சீரழிவு நோயை வளர்த்துக் கொண்டிருக்கின்றன.

தமிழ்த் தேசிய இனத்தின் உண்மையான கலை இலக்கிய வளர்ச்சிக்கு இடையூறாக அரசாங்கப் போக்குகள் உள்ளன என்பதை மறுக்க முடியாது. அதே வேளையில் அரசியலையும் தாண்டிய ஒரு பண்பாட்டு வறட்சி தமிழகத்தில் காணப்படுகிறது. அரசியல், சமூகத் தர வீழ்ச்சிகளுக்குக்கூட இப்பண்பாட்டு வறட்சியே காரணம் எனலாம்.

இப்படிப்பட்ட தமிழ்ச் சமூகத்திற்குத் தார்க்கோவ்ஸ்கி போன்றோரை அறிமுகப்படுத்த முன்வந்திருக்கிற சென்னை பிலிம் சொசைட்டியின் நம்பிக்கையை, துணிச்சலை... என்னென்பது.

திரைப்படக்கலைக்கும் இலக்கியத்திற்குமிடையிலான வேற்றுமைக் கூறுகள், திரைப்படத்தின் தனித்தன்மை, திரைப்படக் கலைஞனுக்கும் அவையினருக்குமிடையிலான உறவு, திரைப்படக் கலைஞனுக்குரிய — அதிலும் புதிய நோக்குகளைக் கொண்டுள்ள கலைஞனுக்குரிய நடைமுறைப் பிரச்சினைகள் எனப் பலவற்றையும் குறித்து அறிய, அனுபவிக்க இந்நூல் உதவுகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக ஆங்காங்குத் திரைப்படச் சங்கங்கள் அமைத்துத் தரமான திரைப்படங்களைத் தமிழ் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்கிற அடங்கா ஆர்வத்தை இந்நூல் தூண்டுகிறது. இதுவே இதன் வெற்றி.

திரைப்படக் கலை பற்றிய வேறுசில நூல்களும் தமிழில் விரைவில் வெளிவரவுள்ளதாகப் பதிப்புரை (பக்-4) தெரிவிக்கிறது. "சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்" என்றானே பாரதி, அந்த வகையில் இது போன்ற நூல்களை வெளியிடுவதும், வாங்குவதும் அமைதியான ஆனால் ஆழமான நிலையான தமிழ்த் தொண்டாகும்.

## முகிலில்களின் மீது நெருப்பு

படைப்பாளர் : **வீரசந்தானம்**
Published by PONNI BOOKS,
12. Ist, Main Road, Nehru Nagar,
Adyar, Madras – 20, Price : Rs. 25/-

தமிழகத்தில், தமிழில் ஓர் அதிசயம் நிகழ்ந்துள்ளது. வீரசந்தானம் எனும் ஓவியரின் 36 நவீன ஓவியங்கள் — ஒரு தொகுப்பாக நூல் வடிவில்— வெளிவந்துள்ளன.

தமிழக ஓவியர்களேயாயினும் ஆங்கிலவழி அறிமுகத்தோடு தான் தம் ஓவியத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளனர். ஓவியத்தில் இடும் கையெழுத்துக் கூட ஆங்கிலத்தில்தான் இருக்கும்.

மாறாக வீரசந்தானத்தின் ஓவியத் தொகுப்பு வெளிவந்துள்ளது. தமிழ் வெறும் மொழி என்கிற அளவில் மட்டுமன்றி ஓவியங்களினுள் இழைபோடுகிற தமிழின உணர்வின்-ஈழத் தமிழரின் இன்னலின், போராட்டத்தின்-வெளிப்பாடாகவும் அமைந்துள்ளது. அதே வேளையில் உலகளாவிய நவீன ஓவியக் கலையைச் செரித்துக் கொண்ட கலைஞனின் படைப்புகளாகவும் இவை மிளிர்கின்றன என்று சொல்லவும் தோன்றுகிறது.

1947 இல் தஞ்சை மாவட்டம் ஒப்பிலியப்பன் கோவிலில் பிறந்த வீரசந்தானம், 1971 இல் ஓவியத்தில் பட்டயம் (Diploma in painting) பெற்றுக் கலையுலகில் அடியெடுத்து வைத்துச் சாதனைகள் பல புரிந்து இன்று தமிழின ஓவியராய்ப் பரிணமித்துள்ளார்.

'சந்தானம் ஓவியங்கள்' எனும் இந்திரனின் கட்டுரை ஒரு நல்ல அறிமுகமாய் – நுழைவாயிலாய் — அமைந்துள்ளது. அடுத்தப் பக்கத்திற்கொன்றாய் ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. ஓவியத் தலைப்புகள் உதவிகரமாய் உள்ளன. பல ஓவியங்களில் அவ்வவற்றுக் கிசைவான ஈழக் கவிதை வரிகள் தரப் பெற்றுள்ளன.

'யாழ் நூலகம்' எனும் ஓவியமும் அதனெதிரிலுள்ள,

'சூழவும் உடைபடும் கடைகளின் ஒலியும்
வெறிக் கூச்சலும் வேற்று மொழியும்
விண்ணுயர்ந்த தீச் சுவாலையும்...'

எனும் கவிதை வரிகளைக் கொண்ட ஓவியமும் என்னளவில் எடுத்துக் காட்டத்தக்கனவாய் உள்ளன. பொதுவாக இத் தொகுப்பிலுள்ள ஓவியங்களில் ஓவியத்தின் மொழி ஆழமாகக்

கையாளப் பட்டுள்ளதாதலின் அவற்றை உணர மேலும் முயற்சி தேவை. அவை ஓவிய இரசனைத் திறனை வளர்த்துக் கொள்வதற்கான ஆர்வத்தைத் தூண்டுகின்றன.

ஓவியத் தொகுப்பைத் தொடர்ந்து எஸ். வி. ராஜதுரை, ஞானக் கூத்தன், த. ஜெயகாந்தன் ஆகியோர் கருத்துகளும் ஆங்கில ஏடுகள் சிலவற்றில் வெளிவந்துள்ள திறனாய்வுரைப் பகுதிகளும் இறுதியில் வீர சந்தானத்தின் ஓவிய-வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன.

ஓர் ஓவியத் தொகுப்பிற்கேயுரிய வகையில் அச்சும், அமைப்பும் அமைந்துள்ளன என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். **மொத்தத்தில் தமிழில் இவ்வகையிலான முதல் நூல் இதுவேயாகும்.**

> கலை மிகவும் மலினப்பட்டும் வணிக மயமாக்கப் பட்டும் உள்ள நிலை தமிழகமெங்கும். இதற்கு எதிரான போக்குகள் இரண்டு. கலையின் சமூகப் பணி பற்றிய இடைவிடாத 'முற்போக்கு' முழக்கங்கள் ; கலையின் அழகியல் அம்சத்துக்கு மட்டும் அழுத்தம் கொடுக்கும் ஒருவித மேட்டுக்குடி (ELITIST) நோக்கு. கும்பல் கலையா? மேட்டுக்குடிக் கலையா? என்று பிரச்சனையை தவறாக எழுப்புதல். உண்மையான தீர்வு உண்மையான அழகியல் மிக்க சமூகப் பணியை மறவாத கலை. இதுவே மக்கள் கலை. கலைகளின் உன்னதத் தன்மையை அழகியல் அம்சத்தை உணராத வறட்டு, 'முற்போக்காளர்' களுக்கும் கலையின் சமூகப் பணியை உணராத அசுவயக் கலைஞர்களுக்கும் விடை சொல்லும் வண்ணமாக இதோ சந்தானம் படைப்புகள் நவீன ஓவியம் தமிழகத்தில் முதன் முதலாக மக்களோடு இன்று உறவை ஏற்படுத்தியுள்ளது. இப்போது கலைஞன் மட்டரக ரசிகத் தனத்தோடு 'சமரசம்' செய்து கொள்ள வேண்டியதில்லை; ரசிகர்களும் கலைஞனின் உயரத்தை அடைய சிரமப்பட வேண்டியதில்லை. இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள், தமிழக மக்களுக்குள்ள கடமைகள் இந்த நவீன ஓவியங்களின் மூலம் கூடுதலான அர்த்தம் பெறுகின்றன.

என எஸ். வி. ராஜதுரை எழுதியிருப்பதைச் தசறிவானதொரு மதிப்புரையாகக் கொள்ளலாம்.

தமிழில் இப்போது தோந்துள்ள இந்த அதிசயம் எப்போதுமே அதிசயமாய் நின்று விடாமல், ஒரு வரலாற்றின் தொடக்கமாய் அமைதல் வேண்டும். இன்னும் இதுபோன்ற நூல்கள் வெளிவர வேண்டும். அத்தகையதொரு வரலாறு தொடர உண்மையான கலையுணர்வுள்ள ஒவ்வொரு தமிழனும் செய்தாக வேண்டிய உதவி இந்நூலை வாங்கித் துய்ப்பதும், பிறரை வாங்கத் தூண்டுவதுமேயாகும்

— பா. மதிவாணன்

# இறைச்சி

பேரா. கோ. வேங்கடாசலம்
(மேனாள் முதல்வர், ஈ.வே.ரா. கல்லூரி)
திருச்சி, பூக்கார விளார் சாலை,
தஞ்சாவூர்.

தமிழ் இலக்கியத்தில் அகப் பொருள் நூல்களில், உள்ளுறை உவமம், இறைச்சி என்பன பயின்று வரக் காண்கிறோம். கருப் பொருளின் இடமாகத் தோன்றி, செய்யுளின் கருத்துப் பொருளுக்கு உபகாரப்படும் வகையில் அமைவதே இறைச்சியும் உள்ளுறை உவமமும் ஆகும். சொற்றொடரின் வாச்சியப்பொருள் வரை நில்லாது, செய்யுளின் கருத்துப் பொருளுக்கு பொலிவும் ஆழமும் சேர்க்கும் வகையில் அவை அமைந்திருப்பதே அவற்றின் சிறப் பாகும்.

குறிஞ்சிக் கலியில், தலைமகளும் தோழியும் இயற்படமொழிந்தும், இயற்பழித்தும் பாடிய வள்ளைப் பாட்டில் இறைச்சி அமைந் துள்ளமையை நச்சினார்க்கினியர் தம் உரையில் எடுத்துக் காட்டுகிறார்

> "பாடுகம் வாவாழி தோழி வயக்களிற்றுக்
> கோடுலக்கை யாகநற் சேம்பின் இலை ஆளாகா
> ஆடுகழை நெல்லை அரையுரலுட் பெய்திடுவாம்" 1

என்றவரிகளின் வாக்கியப் பொருள், தோழி, வாழ்வாயாக. நாம் பாடுவோமாக; இருவரும் அசைகின்ற மூங்கிலினது நெல்லைப் பாறையாகிய உரலிலே பெய்து, வலியினை உடைய யானைக் கொம்பு உலக்கையாகக் குற்று நல்ல சேம்பினது இலை சுளகாகப் புடைத்தும் பாடுவோமாக என்பதே. இப்பொருட்புறத்தே, உயர்ந்த மூங்கிலின் நெல்லுத்தானே உதிர்ந்ததனை எடுத்துக் கொண்டு உரலிற் பெய்து என்றதனால், உயர்ந்த தலைவனை தெய்வம் தானே கொண்டு தருதலின், அவனை நம் வயத்தனாக்கினேம் என்றும், வள்ளைப் பாட்டிற்கு ஏதுவாகிய கோடு உலக்கையாக என்றதனால் கோடு நெல்லைப் பயன்படுத்தினாற் போல, நம் வரைவு கடாவலால் இத்தலைவனை இல்லறப்பயனை பெய்துவிக் கின்றோம் என்றும், சேம்பிலை புடைத்தற்றொழிலை முற்ற முடித்து அரிசியை ஆக்காத தன்மை போல, இக்களவொழுக்கத்தால் அவன் வரைந்து கோடலை முற்ற முடியாதிருக்கின்றோம்" என்ற இறைச்சி நின்றவாறு காண்க[2],

அகப்பொருள் நூல்கள் பலவற்றிலும் இறைச்சி வரும் இடங்கள் எல்லாம் உரையாசிரியர்களாலும் பிற சான்றோர்களாலும் ஆங்காங்கே எடுத்துரைக்கப் படுதலைத் தமிழுலகம் நன்கறியு மாதலின் இஃதொன்றே எடுத்துக் காட்டிற்குச் சாலும்.

இத்தகைய இறைச்சி காளிதாசர் இயற்றிய சாகுந்தலத்திலும் முரசகி ஷிகிபு (Lady Murasaki Shikibu) என்பாள் இயற்றிய ஜென்ஜியின் கதை (Tale of Genji) யிலும் வரக் காண்கிறோம். அவற்றை நிரலே சுட்டுதும்.

1. துஷ்யந்தன், கண்வருடைய தபோவனத்திற்குள் செல்கிறான். அவன் புகுமிடத்து, தபோவன மகளிர் மூவர், செடி கொடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கின்றனர். தன்னுடைய திடீர் பிரவேசம், மகளிருக்கு அதிர்ச்சி தரக் கூடுமாதலால், சற்றே தயங்கி நின்றான். அப்போது அம்மகளிரைச் சற்று நன்கு பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்றான். அவருள், சகுந்தலையின் இயற்கையோடு இயைந்த பேரழகால் ஈர்க்கப் பட்டவனான். பின்வருமாறு தனக்குள் சொல்லிக் கொண்டான். ''காட்டுக் கொடிகள் நாட்டு (தோட்ட)க் கொடிகளினும் விஞ்சுப் அழகால் மிளிர்கின்றன''. இந்தத் தொடரில் நாடுறை மகளிரினும் காடுறை மகளிர் விஞ்சிய அழகியர் என்னும் இறைச்சி, பொருட் புறத்தே தோன்றுதல் காண்க. கருப்பொருளிடமாக, இறைச்சி தோன்றுதலையும் ஈண்டு நுனித்துணர்க[3].

பின்பு காந்தர்வ மணமுறையில் துஷ்யந்தன், சகுந்தலையை மணந்து கொண்டான், சின்னாளில் அவன் தன் நாட்டிற்குச் செல்ல வேண்டிய நிலையில், அவளைத் தன் தூதுவர்களை அனுப்பிக் கண்வரது அனுமதியோடு சில நாளில் அழைத்துக் கொள்வதாகச் சூளுரைத்துப் போயினான் அவன் அகன்ற பிற்றை நாளில் சகுந்தலை தன் குடில் திண்ணையில் அமர்ந்து, தன் காதலன் நினைவிலேயே ஆழ்ந்து கிடப்ப, அதுபோது ஆண்டு வந்த துர்வாச முனிவர் அவள் தன்னை உபசரிக்காத குற்றத்தைப் பெறாதவராய், ''நீ எவன் நினைவில் ஆழ்ந்து உன், கடமையை மறந்தாயோ ? அவன் உன்னை மறக்கற் பாலன்'' எனச் சாபமிட்டார். இட்ட சாபம் கட்டியது ஆதலின், துஷ்யந்தன் மனத்துள் குடி கொண்டிருந்த சகுந்தலை நினைவு மறைந்து போய் விட்டது.

காலப்போக்கில், கண்வமுனிவர், நிகழ்ந்தமை அறிந்து சகுந்தலையைத் தக்க துணைவருடன் துஷ்யந்தனிடம் அனுப்பி வைத்தார். அவர்கள் அரண்மனை சேருமுன், ஒரு காட்சியைக்

காளிதாசர் காட்டுகிறார். அரசனும் விதூஷகனும் அரண்மனையில் ஓர்பால் அமர்ந்திருப்ப, ஹம்சபதிகா என்பவள் (திரை மறைவி லிருந்து) இசையரங்கிலிருந்து பாடுகிறாள்.

"இனிய தேன் வண்டே! இம்மாங்கனியைச் சுவைக்க
சுற்றிச் சுற்றி அலமருகிறாயே, அந்தோ
உன்னருங் காதலி செந்தாமரையின் தேனிதழை
நாடிச் சுவைக்க மறவாதே காண்[4]".

இப்பாட்டில் சகுந்தலையை மறந்து, துஷ்யந்தன் பிற மகளொருத்தியை விரும்புகிறான் என்னும் இறைச்சி பொருட் புறத்தே தோன்றுதல் காண்க. ஈண்டும் கருப் பொருளிடமாகப் பொருள் அமைந்திருத்தல் அறியத் தக்கது.

இதன் பின்னர் அரசன் அவைக்குச் சகுந்தலையும் அவள் துணைவர்களும் வந்து சேர்கிறார்கள். உடன் வந்த முனிவர் குமரர்கள் செய்தியை எடுத்துரைக்கிறார்கள். சாபம் பிணித்த நிலையில் துஷ்யந்தன் சகுந்தலையைத் தன் மனைவியாக ஏற்றுக் கொள்ள மறுக்கின்றான்.

தூய கற்பினளாய சகுந்தலையின் வாய்மொழியைக் கேட்டும் அவள் நிற்கும் நிலை கண்டும் துஷ்யந்தனின் மனம் பேதுறுகிறது. எவ்வளவு சிந்தித்தும் சகுந்தலை பற்றிய நினைவு அவன் உள்ளத்தில் எழவில்லை. சகுந்தலையோ பொய்யுரைக்கும் இழிமகளாகத் தோன்றவில்லை. மறுத்தால் கற்பரசியைக் கைவிட்டதாகும். உடன்பட்டால் பிறன்மனையை விரும்பியதாக முடியும். இந்த அவல நிலையில், அவன் தனக்குள் பின்வருமாறு சொல்லுகிறான்.

"வைகறைப் பொழுதில் பனிமூடிய மது நிறைந்த மலரை அணுகிச் சுவைக்க மாட்டாது. அதனைச் சுற்றித்திரிதரு வண்டு போல், யானும் இந்நங்கையை ஏற்றுக் கொள்ள இயலாது அலமருகிறேன்"[5].

இவ்வாசகத்தின் வாச்சியப் பொருளின் புறத்தே வண்டு, துஷ்யந்தனாகவும் மது நிறைந்த மலர் சகுந்தலையாகவும் விருப்பம் இருப்பினும் பனித்திரையால் மதுவைக் காணமாட்டாது சுற்றிச் சுழலுதல் விருப்பம் இருப்பினும் சாபத்திரையால் உண்மை காண மாட்டாத் தன் நிலையாகவும் இறைச்சி தோன்றுதல் காண்க. அதன் மேலும் கதிர் எழுவது உறுதி; அதனால் பனி விலகுதல் உறுதி; வண்டு உண்மை உணர்ந்து மலர்த்தேன் சுவைப்பது உறுதி அதேபோல் கணையாழி கிடைப்பதும் உண்மை தெரிதலும், துஷ்யந்தன் சகுந்தலையோடு இணைவதும் உறுதி

யென இன்னுமோர் இறைச்சி தோன்றி நிற்றல் காண்க. இஃது உயர்ந்த இறைச்சியாம். ஈண்டும் கருப்பொருளிடமாக இறைச்சி எழுதல் காண்க.

'ஜென்ஜியின் கதை'யில் நகர்ப்புறத்தே உள்ள ஒரு மலைச் சாரலில் புத்த பிட்சுகளும், பிட்சுணிகளும் வாழ்ந்து வருகிறார்கள். ஆங்கு புத்த பிட்சுணிகளில், ஒருத்தி தன் பெயர்த்தியை வளர்த்து வருகிறாள். அந்தக் குழந்தை பத்து வயது எய்துவதற்குள், புத்த பிட்சிணி முதுமை அடைந்து, அதன் பயனாக உடல் தளர்ச்சி அடைகிறாள். விரைவில் தனக்கு மரணம் வந்துவிடுமோ என மனம் கவல்கிறாள். தனக்குப்பின் இச்சிறுமியைக் காப்பாற்றுவார் யார், அவள் வாழ்க்கை எப்படியமையுமோ என்றித் தகைய கவற்சிகளால் அச்சம் அடைகிறாள். இந்நிலையில் ஒரு நாள் அந்திப் பொழுதில், தன்னை வந்தடைந்த அச்சிறுமியை அணைத்தவளாய்ப் பின்வருமாறு சொல்லுகிறாள்.

"Not Knowing if any will come to nurture the tender leaf whereon it lies How boath is the dewdrop to vanish into the sunny air"

இதன் பொருள் 'பசுந்தளிர் மிசை கிடக்கின்ற பனித்துளி, இதனைப் பேணி காக்க வருவார் யார் என்று தெரியாத நிலையில் கதிரொளியினும் காற்றினும் கரைந்து மறைந்து போவதற்கு மனமில்லாமல் எத்துணை வருந்துகிறது !"

பனித்துளி, மூதாட்டியாகவும், பசுந்தளிர் சிறுமியாகவும், கிடத்தல் சிறுமிபால் கொண்ட பரிவாகவும் மறைந்து போதல், தன் மரணமாகவும் தளிரைப் பேணுவார், தன் பெயர்த்தியை ஆதரிப்பாராகவும், பொருள் புறத்தே இறைச்சி தோன்றியவாறு காண்க. ஈண்டும் கருப்பொருளிடத்துப் பொருள் பிறந்தவாறு அறிக.

## குறிப்புகள்

1. குறிஞ்சிக் கலி — 5 ஆம் செய்யுள்
2. ,, ,, — 3 ச். உரை.
3. காளிதாசரின் சாகுந்தலம் — அங்கம் 1
4. ,, ,, — ,, 5
5. ,, ,, — ,, 5
6. The Tale of Gensi by Lady Murasaki Shikibu ; -P.65 A Treasury of Azian Literature, Editedby John D. Yohannan Amentor Book. Published by the New American Library.

# நாட்டுப்புற நிகழ்த்து கலைகளுக்கான ஆய்வு முறையியல்
# (Research Methodology for folk Performing Arts)

டாக்டர் வீ. அரசு

மனித வரலாற்றில் மூலதனத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பு உருவாயிற்று. இந்தச் சமூக அமைப்பு புதிதாக உருப்பெற்றது என்றாலும் இதற்கு முன் இருந்த பல தன்மைகளும் இதனுடன் இரண்டறக் கலந்தே இருப்பதைக் காணமுடிகிறது. இவ்வகை முதலாளித்துவ சமூக அமைப்பிற்கு முற்பட்ட காலத்து மக்களின் சமூக வாழ்க்கையில் இடம் பெற்றிருந்த பண்புகளை 'நாட்டுப்புறவியல்' என்று குறிக்கிறோம். இவ்வகை நாட்டுப் புறவியலில் இலக்கியம், மரபுகள், கலைகள் என்ற பல கூறுகள் இடம் பெற்றுள்ளன.

ஆங்கிலேயர்கள் வருகையால் தமிழுக்குக் கிடைத்த புதிய ஆய்வுத்துறைகளில் ஒன்றாக இதனை நாம் கருதமுடியும். தொடக்கத்தில் ஆங்கிலேயர் பலர் நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழிகள், கதைகள் ஆகியவற்றைத் தொகுக்கும் பணியை மேற்கொண்டனர். பொழுதுபோக்குக் கருதியும், புதிய கூறுகளைக் கண்டறிதல் என்ற ஆர்வத்தின் அடிப்படையிலும் இந்நிகழ்வு நடைபெற்றது. அதன் அடுத்த கட்ட நிலையில் இந்தியவியல் ஆய்வாளர்கள், இந்தியாவின் பழமை குறித்த ஆய்விற்கு நாட்டுப் புறவியலை அடிப்படையாகக் கொண்டு செயல்பட ஆரம்பித்தனர். இந்தப் பின்னனியில்தான், தென்னிந்தியக் கிராமக் கடவுளர்கள் தென் இந்தியாவில் வாழும் இனங்கள், தென்னிந்திய மக்களின் பழக்க வழக்கங்கள் போன்ற ஆய்வுகளை நிகழ்த்தினர். மிக அண்மைக் காலத்தில்தான் கல்வியாளர்கள் இத்துறையில் ஆய்வுகளை நிகழ்த்தத் தொடங்கியுள்ளனர். இதனைப் பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன் தமது "தமிழகத்தில் பின்பற்றப்படும் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுமுறைகள் — மதிப்பீடு" என்ற கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார்.

1871 — 1959 — சேகரிப்புக் காலம்
1960 — 1969 — ஆய்வுத் தொடக்க காலம்
1970 — 1985 — ஆய்வின் வளர்ச்சிக் காலம்

இந்தப் பாகுபாடு நாட்டுப்புற இயலின் ஒட்டுமொத்த ஆய்வு அடிப்படையில் அமைந்திருக்கின்றது. ஒவ்வொரு துறையும்

எவ்விதம் இவ்வகையில் ஆய்வு நிகழ்த்தப் பெற்றது என்பதைத் தனியாகப் பிரித்துப் பார்ப்பது மேலும் தெளிவிற்கு வாய்ப்பளிக்கும். இவ்வகையில் நாட்டுப்புற நிகழ்த்து கலைகளின் ஆய்வுத்தொடக்கம் 1970-களில் தான் தொடங்கியது என்பதை நாம் இங்கு நினைவில் கொள்வது அவசியம்.

நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழிகள் ஆகியவற்றில் ''அமைப்பியல்'' அடிப்படையில் ஆய்வுகள் நிகழ்த்தப்பெற்றுள்ளன. வாய்மொழிப் பண்புகள் (orality) பல வடிவங்கள் (versions) பல அமைப்புகள் (Multiful forms) போன்ற பண்புகள் நாட்டுப்புறப் பாடல்கள் போன்றவற்றில் உள்ளது குறித்த 'அமைப்பியல்' ஆய்வுகள் நிகழ்த்தப் பெற்றுள்ளன. ஆனால் இவ்வகையான ஆய்வுகள் நாட்டுப்புற நிகழ்த்து கலைகளில் நடைபெறவில்லை எனலாம். அமைப்பியல் ஆய்வின் தொடர்ச்சியாக நாட்டுப்புற நிகழ்த்து கலைகளில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சில ஆய்வுகள் நிகழ்த்தப்பெற்றன. மு. இராமசாமி-தோற்பாவைக் கூத்து, அறிவுடைநம்பி தெருக்கூத்து துளசி ராமசாமி - தமிழில் யட்சகானம், கே. ஏ. குணசேகரன் - இராமநாதபுரம் (கிழக்கு) ஆட்டப் பாடல்கள் என்ற வகையில் இவ்வாய்வுகள் குறிப்பிடத்தக்கவை. சென்னையில் மறைந்த கோமதிநாயகம் என்பவர் வில்லுப்பாட்டு குறித்தும், நா. முத்துசாமி தெருகூத்து பற்றியும் ஆய்வுகள் செய்திருக்கின்றனர்.

இதுவரை கூறப்பட்ட நிகழ்த்து கலைகளின் ஆய்வுகள் தொடக்கநிலை என்பதால் பெரும்பகுதி தொகுப்பு என்பதையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. அனைத்துச் செய்திகளையும் சேகரிப்பதில் இருந்த அக்கறை ஆய்வில் இல்லை என்றே கருத இடமுண்டு. இந்தப் பின்னணியில் நாட்டுப்புற நிகழ்த்து கலைகள் குறித்த ஆய்வு முறையியல் அவசியமானது ஆகும்.

நாட்டுப்புறவியலில் பிற துறைகளைவிட பெரிதும் மக்களோடு தொடர்பு கொண்டிருக்கும் தன்மை, நாட்டுப்புற நிகழ்த்து கலைகளுக்கே உண்டு. இதனால் இவ்வாய்வு விரிவாகச் செய்ய வேண்டிய அவசியம் நேரிடுகிறது. மேலும் இத்துறை பிற துறைகளைவிட பல கூறுகளில் வேறுபட்ட பண்புகளைக் கொண்டிருக்கிறது. இத்தனித் தன்மையைப் புரிந்து கொள்வதற்குத் தனியான ஆய்வுகள் பெரிதும் அவசியமாகின்றன. நாட்டுப்புற நிகழ்த்து கலைகளில் ஆய்வு செய்யப் பின்கண்ட தன்மைகளை அடிப்படையாகக் கொள்வது தவிர்க்க முடியாததாகும்.

1. நிகழ்த்து கலைகளில் அமைந்திருக்கும் தனித்தன்மைகள்.
2. கலைகளின் பரிணாம வளர்ச்சியில் இவை பெறும் இடம்
3. சமூக வரலாற்றுக்குரிய அடிப்படைத் தரவுகளில் ஒன்றாக அமைந்திருக்கும் பாங்கு.
4. தொன்மம், சடங்குகள், அரங்கக் கூறுகள் (Theatre) ஆகியவற்றைப் பெற்றிருக்கும் நிலை.

நாட்டுப்புற நிகழ்த்து கலைகளில் பாடல்கள், ஆட்டம், கதைகள் போன்ற பல கூறுகள் இணைந்து அமைந்திருக்கின்றன. பாடல், கதை, கதைப்பாடல், விடுகதை, பழமொழி போன்ற கூறு களை ஆய்வு செய்யத் திட்டமிட்ட வரையறைகளை மட்டும் கைக்கொள்வது போல், நாட்டுப்புறக கலைகளில் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது.

நாட்டுப்புற நிகழ்த்து கலைகளில் பல கூறுகளின் இணைப்பு மூலம் உருவாகும் ஒருமித்த நிகழ்த்துதல் அடிப்படையாகிறது. பல தன்மைகளும் தனித்தன்மைகளைப் பெற்றிருக்கும் அதே வேளை யில் நிகழ்த்து கலைகளில், அவை இணைந்து புதிய வடிவத்தைத் தருகிறது. இணைவதில் சிக்கல் ஏற்பட்டால், நிகழ்த்து கலைகளை நிகழ்த்துவதிலும் சிக்கல் ஏற்படுகிறது. மேலும் வேறு கலைகளுக்கு எழுதப்பட்ட திட்டவட்டமான முறைகள் (Text) கிடைக்க வாய்ப்புண்டு. இதற்கு இல்லை. இக்கலை நிகழ்த்தும் சூழலுக்கு ஏற்ப அதன் வடிவத்தை இயல்பாகவே மாற்றிக்கொள்ளும் தனித் தன்மைகள் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

இவ்வகையில் பல்வேறுபட்ட தன்மைகளின் ஒருங்கிணைப்பாக இக்கலைகள் அமைந்திருப்பதால், தனித்த ஆய்வு முறை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிறது.

கலைகளின் தோற்றம், வளர்ச்சி பற்றிய ஆய்வுகளில் நிகழ்த்து கலைகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. அடிப்படையில் நிகழ்த்து கலைகள்-செவ்வியல் கலைகள், நாட்டுப்புறக் கலைகள் என்று பாகுபடும்.

கலைகளின் வளர்ச்சிப் போக்கில், நாட்டுப்புற நிகழ்த்து கலைகள் (folk), நாட்டுப்புற நிகழ்த்து கலைகளுக்கும் செவ்வியல் கலைக்கும் இடைப்பட்டவை (semi-classical), செவ்வியல் கலைகள் என்று வகைப்படுத்தலாம். இதனைப் பின்கண்டவாறு கூறலாம்.

| | |
|---|---|
| நாட்டுபுற நிகழ்த்து கலை | தொன்மம் (Myth)<br>சடங்குகள் (Rituals)<br>வீர விளையாட்டுகள் (Marshal arts)<br>அரங்கக் கூறுகள் (Theatre) |

| | |
|---|---|
| நாட்டுப்புற நிகழ்த்து கலைக்கும் செவ்வியல் கலைக்கும் இடைப்பட்ட நிலை | சடங்குகள் (Rituals)<br>சடங்குகள் அற்றவை (Non-Rituals)<br>அரங்கக் கூறுகள் (Theatre) |

| | |
|---|---|
| செவ்வியல் கலை | சடங்கற்றவை (Non-Rituals)<br>அரங்கக் கூறுகள் (Theatre) |

இவ்வகையில் கலைகளின் வளர்ச்சியின் உச்சகட்டமாக நிகழ்த்து கலைகள் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. இவற்றில் நாட்டார் நிகழ்த்து கலைகளிலிருந்து செவ்வியல் கலைகள் வளர்ச்சி பெற்றிருக்கும் நிலையைக் காண முடிகிறது. இக்கலை வளர்ச்சியில், வளர்ச்சிப்படி நிலைகளுக்கே காரணமாக அமைவது மனிதனின் தொடர்பு தன்மைதான் (Communication) என்பதையும் அறிய முடிகிறது. நாட்டுப்புற நிகழ்த்து கலைகளில் நிகழ்த்துவோன், நுகர்வோன் இடைவெளி என்பது மிகவும் குறைவாக அமைந் திருக்கிறது. மேல் வளர்ச்சி நிலையில் படிப்படியாக இடைவெளி அதிகமாகிக் கொண்டே போகும் நிலையைக் காண முடிகிறது.

எனவே கலைகளின் வளர்ச்சிப் படிநிலைக்கு உரிய தரவுகளை நாட்டுப்புற நிகழ்த்து கலைகள் தம்முள் கொண்டிருப்பதால் அந்த அடிப்படையில் ஆய்வு நெறிமுறைகளை உருவாக்கிக் கொள்ளுதல் தேவையான ஒன்றாகிறது.

மனித சமூக வரலாற்றில் மொழியின் தோற்றம் மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். இம்மொழித் தோற்றம் சைகைகளையும் ஒலிக் கூறுகளையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. சைகைகளே காலப்போக்கில் மனிதனின் பல்வேறு ஆட்டங்களுக்கு அடிப்படையாக அமைய வாய்ப்பேற்பட்டது. ஒலிக் கூறுகளே கால வளர்ச்சியில் பல்வேறு பாடல்களுக்கும் அடிப்படைக் கூறுகளாக அமைந்திருப்பதைக் காண முடியும். இவ்வகைத் தன்மைகள் குறித்த விரிவான ஆய்வுகள் வெளி வந்துள்ளன.

அதாவது சைகை-ஒலிக் கூறுகள்.பேச்சு-சிந்தனை என்ற வளர்ச்சி நிலைகளைக் காண முடிகிறது.

இதில் சைகைகளுக்கும் நாட்டுபுறக் கலைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. குறிப்பாக நிகழ்த்து கலைகளில் பாவனை முறையில் ஏற்பட்ட ஆட்டங்களைக் குறிப்பிடலாம். இன்றும் பழங்குடி மக்களிடம் உள்ள பல்வேறு ஆட்டங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றது. நாட்டார் நிகழ்த்து கலைகளில் காணப்படும் பல்வேறு கூறுகள் மேற்குறித்த பின்னணியில் ஆய்வு செய்வதற்கான வாய்ப்புகளை மிகுதியாகக் கொண்டிருக்கின்றன.

கலைகளின் வளர்ச்சி நிலையில் அரங்கம் தொடர்பான தன்மை அனைத்து நிகழ்த்து கலைகளிலும் அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

அரங்கக் கலை என்பது திரைப்படம் போன்ற கூறுகளில் ஒரு பக்கம் வளர்ச்சி பெற்றிருக்கிறது. இருந்தாலும் அண்மைக் காலங்களில் அரங்கக் கலையில் நிகழ்த்தப் பெறும் பல்வேறு சோதனை முயற்சிகள் நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கின்றன.

'முழுமையான அரங்கு' என்பது, நாட்டுப்புற நிகழ்த்து கலைகளில் உள்ள பல்வேறு சடங்குகளை நவீனத் தேவைகளுக்கு ஏற்பப் பயன்படுத்துவதில் தான் அமைந்திருக்கிறது என்று கருதப்படுகிறது. ஆர்டார்டு, பீட்டர், ப்ரூக், குரோட்டோவிஸ்கி, ரிச்சர்டு, ஹைனர் போன்ற நவீன அரங்க அறிஞர்களும் இந்திய நிகழ்த்து கலைகளில் உந்துதல் பெற்று, தமது அரங்க முயற்சிகளில் ஈடுபட்டுச் செயல் பட்டனர் செயல்பட்டு வருகின்றனர். இந்தப் பின்னணியில் 1970 முதல் இந்தியாவிலும் இவ்வகை முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. எனவே அரங்கக் கலை ஆய்வு என்பது அடிப்படையில் நாட்டுப்புற நிகழ்த்து கலைகளோடு பெரிதும் தொடர்பு கொண்டிருக்கிறது.

மேற்குறித்த பல்வேறு செய்திகளின் அடிப்படையில் நாட்டுப்புற நிகழ்த்து கலைகளைக் குறித்த ஆய்வை மேற்கொள்ள முயலும்போது, தனித்த ஆய்வு முறையியலைக் கைக்கொள்வது அவசியமாகிறது. இதனைத் தமிழகத்தின் நாட்டுப்புற நிகழ்த்து

கலைகளில் ஒன்றான தெருக்கூத்தில் எவ்விதம் பொருந்திப்பார்க்க முடியும் என்பதைத் தெளிவுபடுத்துவதன் மூலம் இவ்வாய்வு முறையியலைப் புரிந்து கொள்ள முடியும்.

* கதருக்கூத்தில் நீண்ட கதைப் பாடல்கள், (பெரும்பகுதி இதிகாசக் கதைகள்), இசையுடன் அமைந்த பாடல்கள், ஒழுங்கு படுத்தப்பட்ட அடைவுகள், (முத்திரை) ஒழுங்குபடுத்தப்பட்ட நடைகள் (Steps), வேலைப்பாடுமிக்க அலங்காரங்கள் (costumes) குறிப்பிட்ட திருவிழா நாட்களில் நிகழ்த்தும் பண்பு, திரைச்சீலைகள் கட்டியங்காரன், முக அலங்காரங்கள். இசைக்கருவிகள் இப்படிப் பல தன்மைகளைக் காணமுடியும் இதில் நாட்டுப்புறவியலில் உள்ள அனைத்துத் தன்மைகளும் ஏறக்குறைய இடம் பெற்று விட்டன என்றே கருத வேண்டும். எனவே இப்பண்புகளை உள்ளடக்கிய வரையறைகளை உருவாக்கி அவ்வகையில்தான் ஆய்வு செய்ய வேண்டும்.

*தெருக்கூத்தில் நாட்டுப்புற நிகழ்த்து கலைகளின் அடிப்படைப் பண்புகளைக் கொண்டிருக்கும் அதே வேளையில், செவ்வியல் கலைகளில் காணப்படும் அடைவுகள் (முத்திரைகள்) பலவற்றையும் காண முடிகிறது. எனவே கலைகளில் பரிணாம வளர்ச்சியில் இரண்டுக்கும் இடைப்பட்ட தன்மைகளைக் காண முடிகிறது. இத்தன்மையைக் கவனத்தில் கொண்டே ஆய்வு முறையியலைக் கைக்கொள்ள வேண்டும்.

* தெருக்கூத்தில் காணப்படும் பாடல் அமைப்புகள், ஒப்பனைகள், குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் நிகழ்த்துதல், கருவி வாசிப்பது, நடிப்பது, புரவலர்களாக இருப்பது என்ற பாகுபாடு இன அடிப்படையில் அமைந்திருப்பதைக் காண முடியும். இவ்வகைப்பாகுபாடு நிலவுடைமைச் சமூக அமைப்பு அதற்கு முந்திய இனக் குழுக்கள் போன்றவற்றில் உள்ள பல கூறுகளைக் காட்டுவதாக அமைகிறது. ஆய்வின்போது இதனைக் கவனத்தில் கொள்வது அவசியமாகிறது.

* தெருக்கூத்தில் மேடை அமைக்கும் முறை, திரைகள் பிடிக்கும் பாங்கு, கட்டியங்காரன் போன்ற பல அரங்கக் கூறுகளுக்கு அடிப்படையாக, இவ்வகை நிகழ்த்து கலைகள் அமைந்திருப்பதை உறுதிப்படுத்துகிறது.

எனவே, நாட்டுப்புற நிகழ்த்து கலைகளைக் குறித்த ஆய்வை மேற்கொள்ளும்போது, பின்கண்ட தன்மைகளைக் கவனத்தில் கொண்டே ஆய்வு முறையியலை வகுக்கவேண்டும்.

1. பல கூறுகளின் இணைப்பாக இக்கலைகள் அமைந்திருப்பதால், அதற்கேற்பவே ஆய்வு நெறிமுறைகளை வகுத்துக்கொள்ள வேண்டும்.

2. நாட்டுப்புற நிகழ்த்து கலைகள், கலைகளின் வளர்ச்சியில் தனக்கெனத் தனி இடத்தைக் கொண்டிருக்கிறன. அவற்றை ஆய்வின்போது அடிப்படையாகக் கொண்டு நெறிமுறைகளை வகுக்கவேண்டும்.

3. சமூக வரலாறு தொடர்பான தரவுகளில் நிகழ்த்து கலைகள் முக்கியப் பங்காற்றுகின்றன. எனவே நிகழ்த்து கலைகளின் ஆய்வு முறையியல் சமூக வரலாறு பற்றிய முறையியலோடு இரண்டறக் கலந்திருப்பதைக் கவனத்தில் கொள்வது அவசியம்.

4. இன்றைய கலை வடிவங்களில் அரங்கக்கலை குறிப்பிடத் தக்க இடம் பெறுகிறது. அரங்கக் கலை ஆய்வு என்பதே நாட்டுப்புற நிகழ்த்து கலைகளின் ஆய்வின் பிரிக்க முடியாத பகுதியாக அமைந்திருக்கிறது. இந்த அடிப்படையில்தான் நாட்டுப்புற நிகழ்த்து கலைகளின் ஆய்வு முறையியல் அமைதல் வேண்டும்.

# ஒரு நூற்பா — விளக்கம்

டாக்டர் ச. சுபாஷ் சந்திரபோஸ்
அரசர் கல்லூரி, திருவையாறு.

1.0. முன்னுரை : தமிழ் மொழிக்கு இதுவரை கிடைத்துள்ள பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களின் பொருட்செறிவையும் பெருமையையும் உணர்வதற்கும் இக்கால ஆய்விற்கும் பிற்காலத்தில் எழுந்த உரைகள் பெரிதும் துணை நிற்கின்றன. உரையாசிரியர்கள் நூலாசிரியரின் கருத்தைத் தெளிவாக்குவதோடு அவர்கள் கால வளர்ச்சி நிலையையும் விளக்குகின்றார்கள். சிற்சில இடங்களில் முதல் நூலிலிருந்து மாறுபட்ட கருத்தையும் கூறுகின்றனர். இவ்வகையில் தொல்காப்பியம் எழுத்ததிகார நூற்பா ஒன்றிற்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கங்களும் சான்றுகளும் நூலாசிரியர் கருத்தோடு எவ்வகையில் பொருந்தி வருகின்றன. என்பதை இக்கட்டுரை விளக்குகின்றது.

2. 0. வல்லெழுத்து வேற்றுமை உருபுகள் : தொல்காப்பியர் வல்லெழுத்தை முதலாகவுடைய வேற்றுமை உருபுகள் பெயர்ச் சொற்களுடன் புணரும்போது ஒற்றுமிகும் என்பதைக் கீழ்க்காணும் நூற்பாவில் குறிப்பிடுகின்றார்.

வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்கு
ஒல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும் (தொல் எழுத்து 115)

தொல்காப்பியர் தொகுத்துக் கூறும் வேற்றுமை உருபுகளில் நான்காம் வேற்றுமை உருபும் (-கு) ஏழாம் வேற்றுமை உருபும் (–கண்) வல்லெழுத்தை முதலில் பெற்றுள்ளன (தொல் சொல்-65) இளம்பூரணர் 'ஒற்றிடை மிகுதல் வேண்டும்' என்பதற்கு 'வல்லொற்றாயினும், மெல்லொற்றாயினும் இடைக்கண் மிகுதல் வேண்டும்' என உரையெழுதி, நான்காம் வேற்றுமைக்கும் ஏழாம் வேற்றுமைக்கும் கீழ்க்காணும் வல்லொற்று மிகும் சான்றுகளைத் தருகின்றார்.

ஊர் – கு → ஊர்க்கு; ஊர் - கண் → ஊர்க்கண்
நீர் – கு → நீர்க்கு; நீர் – கண் → நீர்க்கண்

2. 1. நச்சினார்க்கினியரும் ஏறக்குறைய இளம்பூரணரைப் பின்பற்றியே சான்றுகளைத் தந்தாலும் உயிரீற்று நிலைமொழி அடிப்படையிலும் ஈரொற்று நிலை (மும்மெய்ம்மயக்கம்) அடிப்படையிலும் சான்றுகளைத் தருகின்றார்.

**உயிரீறு :**

தீ-கு → தீக்கு ; தீ-கண் → தீக்கண்
மனை-கு → மனைக்கு ; மனை-கண் → மனைக்கண்

மும்மெய்ம்மயக்கம் : தமிழில் மும்மெய்ம்மயக்கங்கள் கீழ்க்காணும் அடிப்படையில் அமைகின்றன.

— { ய் / ர் / ழ் } { வல் வல் / மெல் வல் / மெல் மெல் } —

இவ்வடிப்படையில் சில சான்றுகளைத் தருகின்றார்.

வேய்-கு → வேய்க்கு ; ஊர்-கண் → ஊர்க்கண்
வேய்-கண் → வேய்க்கண் ; பூழ்-கு → பூழ்க்கு
ஊர்-கு → ஊர்க்கு ; பூழ்-கண் → பூழ்க்கண்

2.2. உரையாசிரியர்கள் இருவரும் இத்தோடு சான்றுகளைத் தந்து நிறுத்திக் கொண்டிருந்தால் இந்நூற்பாவோடு ஒத்த கருத்துடையவர்கள் எனக் கொள்ளலாம். இதற்கு மேலும் மெல்லெழுத்து மிகும் எனக் குறிப்பிட்டு 'நங்கண், எங்கண், நுங்கண், தங்கண்' என்னும் சான்றுகளைத் தருகின்றார்கள். இச் சான்றுகளின் அடிப்படையில் பார்க்கும் போது இவர்களது கருத்துக் கீழ்க்கண்ட விதிகளின்படி அமைகின்றது.

1. கெடுதல் விதி

ம் → $\phi$ / — வல்லொற்று வேற்றுமை உருபு
நம்-கண் → ந-கண் ; நும்-கண் → நு-கண்
எம்-கண் → எ-கண் ; தம்-கண் → த-கண்

2. தோன்றல் விதி

ந-கண் → நங்கண் ; நு-கண் → நுங்கண்
எ-கண் → எங்கண் ; த-கண் → தங்கண்

மேற்காட்டிய மகர ஈற்று மூவிடப் பெயர்களின் வேற்றுமை ஏற்கும் சான்றுகளைத் தருவதால் தான் சிக்கலே எழுகின்றது. நங்கண், எங்கண், நுங்கண், தங்கண் என்பவற்றில்தாம் மெல்லெழுத்து மிக வேண்டுமா ? ஏன் வல்லொற்று மிக்க சான்றுகளிலேயே மெல்லொற்று மிக்கதாகக் கொள்ளக் கூடாது ?

தீ - கு → * தீங்கு; வேய் - கு → * வேய்ங்கு
ஊர் - கு → * ஊர்ங்கு; பூழ் - கு → * பூழ்ங்கு

இவ்வாறு கொள்ளின் பெற விரும்பும் பொருள் தரா வடிவங்கள் கிடைக்கும்.

3.0. திராவிட மொழிகளில் மூவிடப் பெயர்கள் :- திராவிட மொழிகளை ஆய்ந்த திராவிட மொழியியல் அறிஞர்கள் கீழ்க்காணும் ஒருமை, பன்மை இடப்பெயர்களை மூலதிராவிட (Proto-Dravidian) மொழிக்கு மீட்டுருவாக்கம் (reconstruction) செய்கின்றார்கள். (S. V. Shanmugam, 1971 : 175-195)




காலமாற்றத்தில் அடைப்புக் குறியிலுள்ளவை போன்று சில மாற்றங்களைப் பெற்றிருந்தாலும் புதிய வடிவம் தோன்றியிருந் தாலும் (நான், நீயிர்) எழுத்து இழந்திருந்தாலும் (நின் → நீ)-ன் ஒருமையையும், -ம் பன்மையையும் காட்டும் தன்மையுடையன. மூலதிராவிடத்தோடு ஒற்றுமையுடைய வடிவங்களும் மாற்றம் பெற்ற வடிவங்களும் மரபிலக்கணங்களிலும் தொகுத்துக் கூறப் பட்டுள்ளன.

4.0. இடப் பெயர்களும் வல்லொற்று வேற்றுமை உருபுகளும்:- இச்சான்றுகளைக்கொண்டு பார்க்கும்போது நம்; எம்; - நும், தம் - என்பவை மூவிடப்பெயர்களின் வேற்றுமை உருபு ஏற்கும் வடிவங் களாகும். தொல்காப்பியரும் (தொல். எழுத்து.189) தாம், நாம், யாம் என்னும் இடப்பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது தம்-நம்-எம்- என நெடு முதல் குறுகும் என்று குறிப்பிடுகின்றார். இவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு பார்க்கும் போது இம்

மூவிடப் பெயர்களைத் தொடர்ந்து வல்லெழுத்தை முதலாகவுடைய வேற்றுமை உருபு வரும்போது இனமெல்லெழுத்து மிக்கதாகக் குறிப்பிடுவது பொருந்துமா? இம்மாற்றத்தைத் தொல்காப்பியர் குறிப்பிடும் கீழ்க்காணும் விதியில் ஏன் அடக்க முடியாது?

அம்மின் இறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந ஆகும் (தொல். எழுத்து 180)

$$(\text{அ})\ \text{ம்} \rightarrow \left\{\begin{matrix}\text{ங்}\\ \text{ஞ்}\\ \text{ந்}\end{matrix}\right\} / - \left\{\begin{matrix}\text{க்}\\ \text{ச்}\\ \text{த்}\end{matrix}\right\}$$

இவ்விதியை அம்மீற்றுப் பெயருக்காக வேற்றுமைப் புணர்ச்சியில் குறிப்பிடுகின்றார் மகரம் அல்வழியில் இனமெல்லெழுத்தாகும் என்பதை

அல்வழியெல்லாம் மெல்லெழுத்தாகும் (தொல். எழுத்து 315)
என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். எனவே, வேற்றுமை, அல்வழி என்ற இரண்டிற்கும் பொதுப்படையான புணர்ச்சிகள் பலவுண்டு. அதன்படி இவ்விதியையும் பொது விதியாகக்கொண்டு மெல்லொற்று மிக்கதாகக் கூறப்படும் சான்றுகளெல்லாம் மகரம் இனமெல்லினமாக மாற்றம் பெற்றதாகக் கொள்ளவேண்டும்.

நம்-கண் → நங்கண் ; நும்-கண் → நுங்கண்
எம்-கண் → எங்கண் ; தம்-கண் → தங்கண்

இவ்வகையான ஒரு திரிதல் புணர்ச்சியில் அடக்கிக் கூற வேண்டியதைக் கெடுதல், தோன்றல் என இரண்டு விதிகள் அமைத்துக்கூறுவது உரையாசிரியர்கள் கருத்தா அல்லது தொல்காப்பியரின் கருத்தும் இதுவே தானா என்பதை இனிக் காணலாம்.

5. 0. தொல்காப்பியரும் 'நும்' என்னும் பெயர்ப் புணர்ச்சியும்: தொல்காப்பியர் பல இடங்களில் பொதுமையான ஈற்றெழுத்து அடிப்படையில் விதிகளைக் கூறாது சொல்லடிப்படையில் குறிப்பிடுகின்றார். இவ்வகையில் 'நும்' என்ற முன்னிலைப் பன்மை இடப்பெயர்ப் புணர்ச்சியையும் குறிப்பிடுகின்றார்.

நும்மென் இறுதி இயற்கை யாகும் (தொல். எழுத்து. 188)

'நும்' என்னும் இப்பெயர் சாரியை பெறாமல் வேற்றுமை உருபுகளை ஏற்றுவரும் தன்மையைக் குறிப்பிடுகின்றார். நச்சினார்க்கினியர் இதற்குக் கொடுக்கும் சான்றுகளுள் ஒன்று 'நுங்கண்' என்பதாகும் இப்புணர்ச்சி,

ம்→ங்/—க் நும்—கண்→நுங்கண்

என்ற விதியின்படி அமைந்து விடுகின்றது.

5. 1. புள்ளி மயங்கியலில்,

..........

தொடக்கங் குறுகும் பெயர்நிலைக் கிளவியும்
வேற்றுமையாயின்...
மெல்லெழுத்து மிகுதல் ஆவயினான (தொல். எழுத்து 321)

என்ற நூற்பாவும்

நும்மென ஒருபெயர் மெல்லெழுத்து மிகுமே
(தொல். எழுத்து. 326)

என்ற நூற்பாவும்' வல்லெழுத்து ... ஒற்றிடை மிகுதல் வேண்டும் என்ற நூற்பாவிற்குத் 'தங்கண், எங்கண், நுங்கண், தங்கண்' என்ற சான்றுகளைக் கொடுக்க அடிப்படையாக இருந்தன எனக் கொளள் லாம். தொல்காப்பியர்,

மகர இறுதி வேற்றுமை யாயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே (தொல். எழுத்து. 311)

என்ற நூற்பாவில் எல்லா மகர ஈறுகளும் வேற்றுமையில் கெடும் எனப் பொதுப்படக் கூறியுள்ளார். வேற்றுமைப் புணர்ச்சியில் பெரும்பாலும் எல்லாச் சொல்லின் மகர ஈறும் கெட்டாலும் சில இடங்களில் கெடாமல் திரியும் என்பதற்கு மூவிடப் பெயர்களின் வேற்றுமை ஏற்கும் வடிவங்களே சான்றாகும். புணர்ச்சியில் மற்ற மகர ஈற்றுப் பெயர்களைவிட மூவிடப் பெயர்கள் மாறுபட்ட புணர்ச்சி இலக்கணங்களைக் கொண்டுள்ளன. வேற்றுமை ஏற்கும் போது கெடுமுதல் குறுகும்; அதிகமாகச் சாரியை ஏற்று வரா. இச் செய்திகளைத் தொல்காப்பியரும் மல இடங்களில் குறிப்பிடுகின்றார். (தொல். எழுத்து 116, 162, 188, 189). மேலே 2.2 இல் காட்டியதைப் போன்று தொல்காப்பியரின் கூற்றுப்படி உரையாசிரியர்களின் சான்றுகளை விளக்க வேண்டு மாயின் இரண்டு விதிகள் (கெடுதல், தோன்றல்) கூறவேண்டும். ஒரே விதியில் விளக்க வேண்டுமாயின் கீழ்க்கண்ட விதியில் அமையும்,

$$ம் \rightarrow \begin{Bmatrix} ங் \\ ஞ் \\ ந் \end{Bmatrix} / — \begin{Bmatrix} க் \\ ச் \\ த் \end{Bmatrix}$$

நும் - கை → நுங்கை
நும் - செவி → நுஞ்செவி
நும் - தலை → நுந்தலை

326-ஆம் நூற்பாவிற்கு 'நும்புறம்' என்றொரு சான்றும் கொடுக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியர் உரையாசிரியர்களின்

கருத்துப்படி கூறவேண்டுமாயின் 2.2 - இல் விளக்கப்பட்டுள்ள இரண்டு விதிகளின்படி இதையும் விளக்க வேண்டும்.

கெடுதல் : நும் - புறம் → நு - புறம்

தோன்றல் : நு - புறம் → நும்புறம்

இறுதியாகப் பெறும் வடிவில் உள்ளதும் புணர்ச்சியின் போதும் உள்ள இயற்கையான புணர்ச்சி அமைப்பை விட்டு இவ்வாறான விதிகளைக் கூறும்போது மொழியில் சிக்கல் ஏற்படுகின்றது. ஆனால் இவ்விரண்டு சொற்களும் புணரும்போது எவ்வகையான மாற்றமும் பெறாமல் இயல்பாகவே அமைகின்றன.

நும் புறம் → நும் புறம்

5. 2 வல்லெழுத்து மிகினு மானமில்லை (தொல் எழுத்து. 247) மெல்லெழுத்து மிகுமே (தொல். எழுத்து. 246) எனப் பல இடங்களில் குறிப்பிடும் தொல்காப்பியர் ஆய்வுக்குள்ள நூற்பாவில் 'ஒற்றிடை மிகுதல் வேண்டும்' எனப் பொதுப் [படையாகக் கூறி விடுகின்றார். நங்கண், எங்கண், நுங்கண், தங்கண் என்ற சான்றுகளில் மெல்லினம் மிக்கதாகக் கூறுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். [ஒற்று மிகுதல் வேண்டும் என்பது 'அவ்விடத்து மிகுவது, வந்த வல்லொற்றே யாதல் தேற்றம்' என்று க. வெள்ளை வாரணனார் கூறுவதும் இவண் குறிப்பிடத்தக்கதாகும். தொல்காப்பியர் ஒற்றுமிகும் எனக் குறிப்பிடும் இடங்களிலெல்லாம் உரையாசிரியர்கள் அவ்வொற்றெழுத்துக்களே மிக்கதற்கான சான்றுகளைத் தருவதும் இவண் குறிப்பிடத் தக்கதாகும்.

நெட்டெழுத்திம்பர் ஒற்றுமிகத் தோன்றும்
அப்பான் மொழிகள் அல்வழியான (தொல். எழுத்து. 197)

யாடு-ஐ → யாட்டை ; யாடு-ஒடு → யாட்டொடு

சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்
ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும் (தொல். எழுத்து. 206)

அ-ஞாலம் → அஞ்ஞாலம் ; அ-மணி → அம்மணி

அ-நூல் → அந்நூல் ;

6.0 மரபிலக்கணத்தில் புணர்ச்சி : தொல்காப்பியம் போன்ற மரபிலக்கணங்களில் புணர்ச்சி விரிவாகப் பேசப்படுகின்றது. பெயர்-பெயர், பெயர்-தொழில், தொழில்-பெயர், தொழில்-தொழில் என்ற அமைப்பில் சொற்கள் புணரும் தன்மையையும் வேற்றுமை, அல்வழி எனப் பொருள் அடிப்படையில் புணரும் தன்மையையும் உயிர்,

மெய் என்ற ஈற்று அடிப்படையில் புணரும் தன்மையையும் இயல்பு, தோன்றல், திரிதல் என்னும் அடிப்படையில் விளக்கப்படுகின்றன. இவ்வாறு சில விதிகளை வகுத்துக் கொண்டு புணர்ச்சி விதி கூறுவதால் பல பொதுப் புணர்ச்சிகளுக்கெல்லாம் தனித்தனி விதிகள் கூறப்பட்டுள்ளன.

நிலைமொழியின் மகர ஈறு வருமொழியின் முதலில் கசத வரும் போது முறையே ங ஞ ந ஆகும் என்ற விதியில் அடங்க வேண்டிய 'நும்' என்னும் சொல்லுக்கு 'நும்மென் ஒருபெயர் மெல்லெழுத்து மிகுமே' எனத் தனியான ஒரு விதியைக் குறிப்பிடுவதால் 'வல்லெழுத்து... ஒற்றிடை மிகுதல் வேண்டும்' என்ற நூற்பாவிற்கு வலிய மெல்லொற்று மிகுதியை உரையாசிரியர்கள் குறிப்பிடு கின்றார்கள்.

7.0. முடிவுரை :- பெரும்பாலான சான்றுகளில் ஒரு மாற்றம் ஒழுங்காக இருந்தாலும் (வேற்றுமைப் புணர்ச்சியல் மகர ஈறு கெடுதல்) சிலவற்றில் அம்மாற்றம் அமையாது (நும் போன்ற மகர ஈறு). இவ்வாறு வருபவற்றை விதி விலக்கு விதியாகக் கொள்ள வேண்டுமேயொழிய பெரும்பான்மையில் அடக்கி விட முடியாது. எல்லா மொழிகளும் வரலாற்றில் சில மாற்றங்களைப் பெற்றிருந்தாலும் ஓர் ஒழுங்கமைப்பு இல்லாமல் அமையா. மாற்றமும் ஓர் வரன் முறையுடனே நிகழும். நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது

1. ஒன்று மற்றொன்றாக மாறும்
   மண்-தீது → மண்டீது ; மண்-குடம் → மட்குடம்
2. ஒன்று கெடும்
   மரம்-வேர் → மரவேர்
3. ஒற்றெழுத்து மிகும்போது அவ்வவ்வொற்றெழுத்தே மிகும்.
   வல் → வல்-வல் ஊர்-கண் → ஊர்க்கண்
   மெல் → மெல்-மெல் அ-மண் → அம்மண்

எனவே நங்கண், எங்கண், நுங்கண், தங்கண் என்பவை மகரங் கெட்டு இன மெல்லெழுத்து மிக்கது எனக் கொள்வதைவிட ம் → ங்/-க் எனக் கொள்வதே பொருத்தமான விதியாகும்.

**துணை நூற்கள் :-**

1. இளம்பூரணர் தொல்காப்பியம் - சொல்லதிகாரம், நமச்சிவாய முதலியார் பதிப்பு சென்னை. 1927

2. 1972 தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், கழக வெளியீடு சென்னை.

3. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் கழக 1972 வெளியீடு, சென்னை.

4. வெள்ளைவாரணனார், க., தொல்காப்பியம் - நன்னூல், 1974 எழுத்ததிகாரம், சிவகாமி அச்சகம், அண்ணாமலை நகர்.

5. Shanmugam, S. V-, Dravidian Nouns (A Comparative 1971 Study, Annamalainagar.

---

## சிரிப்பு

சொ. ஞானசம்பந்தன்
7, கிராம்புத் தோட்ட நடுவீதி,
காரைக்கால் 609 602

மனிதனால் மட்டுமே சிரிக்கமுடியும். 'சிரித்துப்பரு' என்னும் பழமொழி சிரித்தால் சதை போடும் என அறிவிக்கிறது. பருப்போமோ மாட்டோமோ, சிரிப்புக்குக் காரணமான நகைச்சுவை உணர்ச்சி வாழ்க்கைத் துன்பங்களை, ஏமாற்றங்களை மறக்க அல்லது குறைக்க உதவுதல் உறுதி. 'நகைச்சுவையுணர்ச்சி இல்லாவிடில் 'நான் தற்கொலை செய்து கொண்டிருப்பேன்' என்றாராம் காந்தி. ஆனால் எப்போது சிரிப்பது, எதற்குச்சிரிப்பது என்னும் நல்லறிவு இல்லாமல் எதற்கெடுத்தாலும் சிரிப்பாய்ச் சிரிக்கக்கூடாது.

பிறருடைய உறுப்புக் குறையைக் கண்டோ, அதைக் காரணமாய்க் கொண்டோ சிரிப்பது நாகரிகம் ஆகாது. கண் குறைபாடு உள்ளவர், காது கேளாதவர், கால் ஊனமுடையோர், பேச இயலாதோர், திக்கிப் பேசுவோர் முதலியவர்களைப் பாத்திரங்களாய்க் கொண்ட படக்காட்சிகளில் அவர்களைக் கதையாசிரியர்கள் இழிவுபடுத்துகிறார்கள் : அவர்களின் செயல் களைப் பார்க்கின்றவர்களுட் பெரும்பாலோர் சிரிக்கிறார்கள் ; அன்றாட வாழ்விலுங் கூட அவ்வாறே நடந்துகொள்கிறார்கள்.

மற்றவர்களுடைய துன்பங்கண்டு சிரிப்பதும் நாகரிகம் அன்று. தவறிக் கீழே விழுந்தவர், திருடரிடமோ மறதியாலோ தம் பொருளை இழந்தவர், தம் முயற்சியில் தோற்றோர், பிறருடைய பேச்சை நம்பி ஏமாறியோர் முதலியோரைக் கண்டு விழுந்து விழுந்து சிரிப்பவர் பலர்; அவர்களைக் கேலி செய்வோர்க்கும் பஞ்சம் இல்லை கீழே விழுந்தவரைப் பார்த்து 'என்ன எடுத்தீங்க?' என்றும், முழங்காலில் குருதி வழிதல் கண்டு 'முழங்கால் வெத்திலை பாக்கு போட்டிருக்கே' என்றும் கிண்டல் செய்வாரை நாம் அடிக்கடி பார்க்கிறோம்.

'இடுக்கண் வருங்கால் நகுக' என்பதற்குப் பொருள் பிறரது துன்பங் கண்டு மகிழுங்கள் என்பதன்று.

கம்ப இராமாயணத்தில் (பாலகாண்டம் வரைக் காட்சிப்படலம்) ஒரு காட்சி : பளிங்குக் கல் பதித்த இடமென்று தவறாய்க் கருதிக் கொண்டு பெண்கள் விரைவாய் நடந்து சென்று நீர்ச் சுனையில்

இறங்கி விட்டார்கள் ; அவர்களுடைய ஆடைகள் நனைந்தன. அதைக் கண்ட வீரர்கள் சிரித்தார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் துரியோதனனைக் கண்டு திரௌபதி சிரித்தமை தானே மாபாரதப் போருக்கு அடிப்படைக் காரணம் ?

நம் மக்கள் பண்டைக் காலம் முதலே பரம்பரை பரம்பரையாய் இத்துறையில் பண்பாடு அற்றவர்களாய் இருந்து வருகிறார்கள் என்பதை இவ் விரண்டு இதிகாசங்களும் மட்டுமன்றி இலக்கணமும் காட்டுகின்றது.

சிரிப்பைத் தொல்காப்பியர் நான்கு வகையாய்ப் பிரித்தார் :
எள்ளல் இளமை பேதைமை மடனென்
றுள்ளப் பட்ட நகைநான் கென்ப.

எள்ளல் என்பது கேலி செய்தல். கேலி செய்து சிரிப்பதற்குப் பேராசிரியர், ''குருடரும் முடவரும் செல்லும் செலவு'' என எடுத்துக் காட்டுத் தந்துள்ளார் ; செயிற்றியனார், ''முடவர் செல்லும் செலவின் கண்ணும்... கூனர் கண்ணும் குறளர் கண்ணும் ஊமர் செவிடர் கண்ணும்'' என்பன முதலிய பல காட்டுகள் எழுதியுள்ளார். உறுப்புக் குறை உடையாரைக் கண்டு எள்ளிச் சிரிப்பதைத்தான் இருவரும் குறிப்பிடுகின்றனர்.

இப்படி ஏளனம் செய்து சிரித்தல், 'கற்று நல்லொழுக்கமுடைய அறிவுடையோரிடத்தில் தோன்றாது' என இளம்பூரணர் விளக்கியுள்ளார்; ஆகையால் இத்தகைய எள்ளல் பண்பாடன்று என்று அவர் கருதியுள்ளமை தெளிவு.

பிறரது மனத்தைப் புண்படுத்தக் கூடிய வகையில் சிரிப்பது கூடவே கூடாது ; மற்றவர்களுடைய குறைபாட்டை அல்லது துன்பத்தைக் கண்டு இரங்குதலே அறிவுடைமை ; முடிந்தால் அவர்களுக்கு உதவ முந்துதல் பேரறிவுடைமை.

அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றா கடை?

---

## ஆண்ட தமிழகம்

என். சண்முகம்
7, மேற்கு ராசா வீதி
ஆலந்தூர்,
சென்னை - 600 016.

இங்கிலாந்து நாட்டு வரலாற்றை எடுத்துக்கொண்டால் முதலாம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை அவர்களது அரச பரம்பரை வரலாறு கிடைக்கிறது. கோட்டை கொத்தளங்கள் அரண்மனைகள் மற்றும் அவர்கள் உபயோகித்த பொருட்கள் எல்லாமுமே இன்றும் நாம் பார்க்கும்படி கிடைக்கின்றன. ஆனால் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடியெனத் திகழ்ந்த நம் தமிழ் மன்னர்கள் வாழ்ந்த காலத்தைப் பற்றிய சின்னங்கள்—கோட்டை கொத்தளங்கள்—அரண்மனைகள் எதையுமே நம்மால் காணமுடியவில்லையே! ஏன்?

முதலாம் நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்த இங்கிலாந்து நாட்டு மக்கள் பற்றிய வரலாற்று குறிப்புகளைத் தவிர வேறு ஏதும் நமக்குக் கிடைக்கவில்லை. அப்பொழுது அவர்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்து வந்தனர். ஆனால் அதே முதலாம் நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்த தமிழ் மக்கள் — அரசியல் — சமுதாயம் — நீதி ஆகிய எல்லாத் துறைகளிலுமே சிறந்த நாகரிக வாழ்க்கை பெற்று வாழ்ந்து வந்தனர் என்பதை நம் சங்க கால நூல்கள் தெரிவிக்கின்றன.

அப்படி நாகரிக வாழ்க்கையில் ஊறித் திளைத்த தமிழக மன்னர்கள் ஏன் கோட்டை கொத்தளங்கள் அமைத்துக் கொள்ளவில்லை—அரண்மனைகள் உப்பரிகைகள் கட்டிக்கொள்ளவில்லை.

தமிழக மன்னர்கள் தாங்கள் மக்களுக்காகவே வாழ்வதாக எண்ணினார்கள் — மக்களிடமிருந்து பிரிந்து வாழ விரும்பவில்லை. அரண்மனையில் வாழ்ந்தால் மக்களிடமிருந்து பிரிந்து விடுவோம்— மக்களின் சுகதுக்கங்களை அறிந்து கொள்ள வாய்ப்பு இருக்காது— என்று கருதினார்கள் போலும்.

மேலும் சேர சோழ பாண்டிய மன்னர்கள் எப்பொழுதும் தங்களுக்குள் போர்புரிந்த வண்ணமே இருந்தனர். போரில் வீர மரணம் அடைந்தால் சொர்க்கம் கிடைக்கும் என்ற எண்ணத்திலேயே மூழ்கி இருந்தனர். நீண்டகாலம் வாழ்ந்து மக்களுக்கு— நாட்டுக்கு உயர்வுதரும் — நிலையான — செயல்களைச் செய்ய வேண்டும் என்ற எண்ணமே அவர்களுக்கு இருந்ததில்லை.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

## வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப் பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்துத் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப் பெறும் இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பி யனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு


## கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| யாழ் நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள் | ரூ. | 50 00 |
| கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர் | ரூ. | 30 00 |
| கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு) | ரூ. | 60 00 |
| இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ் | ரூ. | 6 00 |
| கபிலர் – நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 4 00 |
| நக்கீரர் — நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 3 00 |
| மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு - பா. வே. மாணிக்க நாயக்கர் | ரூ. | 2 00 |
| கவியரசு நினைவு மலர் | ரூ. | 1 00 |
| தமிழரசி குறவஞ்சி | ரூ. | 0 75 |

### பிற வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்] | | |
| கலைக் கூத்தன் கவிதைகள் | ரூ. | 4 50 |

விற்பனைக் கழிவு 20% உண்டு அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர்-613 002.

Regd. No. TN/TB/24

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு ஆசிரியர்
"தஞ்சை சரபோஜி மன்னர்
சரஸ்வதி மகால் நூலக
செய்தி"
அரண்மனை வளாகம்,
தஞ்சை 613001

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

## தமிழ்ப் பொழில் கட்டணம்

| | | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 2 50 | 3 00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 30 00 | 60 00 |
| வாழ் நாள் கட்டணம் | ரூ. | 250 00 | 600 00 |

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராஜவீதி,
தஞ்சாவூர் - 613 009.